# கதிர்காம



# புராணம்.

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

# கதிர்காம புராணம்.

சமாதானநீதிபதி

ஸ்ரீமாந்

## க. நமசிவாயம் அவர்கள்

விருப்பத்தின்படி

வித்துவான்

ஸ்ரீமத்

## சி. தாமோதரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சங்கானை
சச்சிதானந்த அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

பிரமாதீச ஹு கார்த்திகைமீ

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.



அருணகிரிநாதர் அருளிச்செய்த

# திருப்புகழ்.

## கதிர்காமம்.

௧ தன தனன தான தன தனன தான

தன தனன தான—தனதான.

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்

Digitized By Roja Muthiah Research Library

மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்
அருவரை கணீறு படவசுரர் மாள
வமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறைவாரி இதழியணி வேணி
யமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத திருவினை விடாத
விமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
விருதனவி னோதப் பெருமாளே.

௨ தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா—தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போன பட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்று னிருகூறாய்ச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்றாய் வலக்கா ரமூற்றாய்
திருத்தா மறைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா னழுத்தே
கதிர்க்கா மமுற்றார் முருகோனே.

௩ தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த—தனதான.

மருவறு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்

Digitized By Roja Muthiah Research Library

மதில்கடா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணுன் மூத்த முதிரயா மத்தி
னிரவினு னித்த மெலியாதே
யிடருரு மெத்த மயல் கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிருகா மத்தி லுறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடிகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முடியவே வெருட்ட பெருமானே.

---

௨ தனனதா தத்த தனனதா தத்த
தனனதா தத்த — தனதான

கலையிலே மைக்கண் விழியிலே பெற்ற
குருதி நேரிட்ட விதழ்மாதர்
குழையிலே தெற்று நடையிலே நெய்க்கொள்
குழலிலே பற்க டனிலேமா
முலையிலே யற்ப விடையிலே பத்ம
முழுநிலா வட்ட முகமீதே
முதுகிலே சுட்டி நுதலிலே யிக்கு
மொழியிலே சிக்கி விடலாமோ
தலைவனே முத்தி முதல்வனே துட்ட
நிகலனே நித்த மிளையோனே
சதுரனே பித்தர் புதல்வனே மெச்சு
சரவணா செச்சை முருகோனே
உலகனே மிக்க கதிர காமத்தி

Digitized By Roja Muthiah Research Library

லொருவனே விட்ணு மருகோனே
யொயிலனே பச்சை மயிலனே சித்ர
வுருவனே பத்தர் பெருமானே.

---

௫ தனதானத் தனதான

இறவாமற் பிறவாம லெனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

---

௬ தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத்—தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தவர்க் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனே
யுரிசைசூழ் செய்ப்பதிக் குரிய சாமர்த்தியப்
புருட வீரத்துவிக் ரமசூரன்
யுரளவே ரெட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிங்
கதலிகூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகாமக் கிரிப் பெருமானே.

---

௭ தனனதான தானன தனனதான தானன
தனனதான தானன—தனதான

அடைபடாது நாடோறு மிடைவிடாது போம்வாயு
வுடையமேலு வீடாகு மெனநாடி

அருள்பெரு வநாசார கருமயோ கியாய்நாளு
மவனிமீ திலோயாது தமொறி
உடலம்வே றியான்வேறு கரணம்வேறு வேறாக
வுதறிமாசு காதீத வடிவூடே
யுருகியாறி யாசார பரமயோகி யாமாறு
னுபயபாத வாரீச மருள்வாயே
வடபராரை மாமேரு கிரியெடாந டாமோது
மகரசீத பாலாழி யமுதாக
மகுடவான ரானோவ மதிய்நோவ வாரீச
வனிதைமேவு தோளோனு முடனேவக்
கடையுமாதி கோபாலன் மருகதீர வேல்வீர
கதிரகாம மீதூரி லுறைவோனே
கனகலோக பூபால சகலலோக வாதார
கருணைமேரு வேதேவர் பெருமானே.

---

அ தனனதான தானதத்த
தனனதான தானதத்த
தன்னதான தானதத்த—தனதான.

முதிருமார வாரநட்பொ
டிலகுமார வாரமெற்றி
முனியுமார வாரமுற்ற கடலாலே
முடிவிலாது நேர்வடக்கி
லெரியுமால கால்விடத்தின்
முழுகியேறி மேலெறிக்கு நிலவாலே
வெதிரையாயர் வாயில்வைத்து
மதுரராக நீடிசைக்கும்
வினைவிடாத தாயருக்கு மளியாதே
விளையுமோக போகமுற்றி
யளவிலாத காதல்பெற்ற
விகடமாதை நீயணைக்க வரவேணும்
கதிரகாம மாநகர்க்கு
ளெதிரிலாத வேல்தரித்த
கடவுளே கலாபசித்திர மயில்வீரா

கயலுலாம்வி லோசனத்தி
களபமார்ப யோதரத்தி
ககனமேவு வாளொருத்தி மணவாளா
அதிரவீசி யாடும்வெற்றி
விடையிலேறு மீசர்கற்க
வரியஞான வாசகத்தை யருள்வோனே
யகிலலோக மீதுசுற்றி
யசுரர்லோக நீறெழுப்பி
யமரலோகம் வாழவைத்த பெருமாளே

Digitized By Roja Muthiah Research Library

# விஞ்ஞாபனம்.

உலகத்திலிருக்குந் தலங்களுள்ளே கதிர்காமதலம் மகாமகிமைபொருந்தியதென்பது யாவருக்குந் தெரிந்ததொன்றாம். இக்கலிகாலத்தில் எவரும் அதிசயிக்கும்படி பல அற்புதச் செயல்கள் அங்கு நடந்து வருதலையும் யாவருமறிவர். உலகத்தார் கதிர்காமதலத்தையடைந்து வணங்கியும், பல பிரார்த்தனைகள் செய்தும், விரும்பிய விரும்பிய பேறுகளைக் குறைவறப் பெற்று வருதலும் உலகப்பிரசித்தமாம். கதிர்காமதலத்தின் பெயரைக் கேட்டமாத்திரத்தில் எவர்க்கும் உள்ளத்தில் ஓர் அச்சமும் கசிந்தொழுகும் பேரன்பும் உண்டாதலும் அநுபவமாம்.

அம்மகா தலத்திலுள்ள ஆலயத்திருப்பணி நடந்தது இன்னகாலமென்றுணர முடியாமல் நெடுங்காலம் போய்விட்டபடியால், அங்குள்ள மண்டபங்கள், தூண்கள், மதில்கள் முதலிய யாவும் பழுதடைந்து இன்னுஞ் சிலகாலத்துள் விழுந்துவிடத்தக்க நிலைமையிலிருப்பதால், அவற்றைப் பழுதடையாவண்ணம் மறுபடியும் புதுக்குவித்துத் திருப்பணிசெய்விக்க வேண்டியது ஆவசியகத்திலும் ஆவசியகமாயிருக்கின்றது.

அங்கே செய்விக்கவேண்டிய பணிகளாவன.—

1. திஸமாருமவிலிருந்து கதிர்காமத்துக்குப் போகும் வழியாகிய 10 மைல்தூரம் போக்குவரவுக்கு வசதியின்றிப் பெருஞ் சங்கடமாய் எவர்க்கும் பெருங் கஷ்டத்தை விளைவிப்பதால், அக்கஷ்டம் நீங்கி எவரும் சுகமாய்ப் போக்கு வரவு செய்யும்படி மண்தெருப் போடுதல். அத்தெருவிலே சிறிய மதகுகள் 60 வரை கட்டுதல். திஸமாருவுக்குச் சமீபமான இடத்தில் கற்பாவிய நீர்ப்பாய்ச்சல் வழி 10 அடி அகலத்தில் 150 அடி நீட்டுள்ளதாய் உண்டாக்கல். இரண்டருகிலும் கான்வெட்டுதல். தெரு 10 அடி அகலம் இப்பொழுதிருப்பது போதாமையால் 20

Digitized By Roja Muthiah Research Library

அடி அகலத்திற் பெரிதாக்குதல். மரங்களைத் தறித்து வேர்களைப் பிடுங்குதல். மூன்றுமைல்தூரம் மண் கரைந்து கீழுள்ள கற்கள் கிளம்பிப் போக்குவரவு செய்ய வசதிக்குறைவாயிருப்பதால், வெடிவைத்துடைத்துச் சமன்செய்தல். 2 மைல்தூரம் மலைவெள்ளத்தினாலே தெருக்கரையாதபடி தெருவை அகலப்படுத்தி இரண்டுபக்கங்களிலும் பெரிய கான்கட்டி வெள்ளத்தைப் போகவிடுதல். தெருவில் மூன்று இடத்தில் வண்டிகள் போகக்கூடாதபடி பெரிய ஏற்றம் இறக்கம் இருப்பதால் அவற்றைவெட்டி இயன்றளவு சமன்செய்தல். கான்வெட்டும் மண்ணைத் தெருவிற்போட்டு 10 மைலும்மண்தெருவாக்கல். மாணிக்க கங்கைக்குச் சமீபத்தில் வண்டிகள்போய் நிற்பதற்கு ஓர் இடம் அமைத்தல். இவைகளுக்குரிய செலவு மதிப்பு ரூபா 10000.

2. திஸமாருமவில் இப்பொழுது 5 ஏக்கர் நிலம் வாங்கிவிடப்பட்டிருக்கிறது. அதில் திருப்பணிச்சாமான்களை வாங்கிவைத்தனுப்பவும், தெருவேலைசெய்வோர் செய்விப்போர் தங்கவும் ஓர் இடங்கட்டுதல். கிணறு ஒன்று அங்கு உண்டாக்கல். கட்டிடத்தைப் பின்பு யாத்திரைக்காரர் தங்கும் மடமாக ஆக்கக்கூடும். இதன்மதிப்பு ரூபா 3000.

## கோவில்.

1. முத்திலிங்கசுவாமி கோவில்—இக்கோவில் மண்சுவரும் காட்டுத்தடித்தூண்களும் பரச்சலாகைகளும் பண் ஓடுங்கொண்டு வேலைசெய்து பழுதுபட்டு அரிய நிலையிலிருந்து இப்பொழுது புதிதாகத் திருப்பணி வேலையும் தொடங்கிச் சிறிதாக ஒருகோவில் கட்டிவேலை நடந்துவருகிறது.

2. வள்ளியம்மை ஆலயம்.-இதன் சுவர்களும் தூண்களும் விழுந்து, காட்டுத்தடிகளால் தூண் நிறுத்தி அந்த ஆதரவில் தங்கிநிற்கின்றது. பரஉத்திரங்கள் கைமரங்கள் சலாகைகள் போட்டு பண் ஓடும் போடப்பட்டிருக்கிறது. அவைமூ

Digitized By Roja Muthiah Research Library

ந்துபட்டு மழைக்கு ஒழுகி வெள்ளம் நிற்பதோடு இன்னுஞ் சிலகாலத்துள் முழுவதும் விழுந்துவிடத்தக்கதாகவும் இருக்கிறது. இதைப்புதிதாகக்கட்டுவதற்கு மதிப்பு ரூபா 10000.

3. மாணிக்கப்பிள்ளையார்கோவில்—பழையகோவிலை பால்குடிபாவா இடித்துத் திருப்பணிசெய்யத்தொடங்கி, மண்சுவருள்ள ஒரு சிறுஓட்டுக்கொட்டகையில் சுவாமியை வைத்திருக்கிறார் அதுவும் பழுதாய் விழத்தக்க நிலைமையிலிருக்கிறது. இதைப் புதிதாய்க்கட்டுவதற்கு மதிப்புரூபா 5000.

4. தெய்வயானையம்மைகோவில்—இக்கோவிலை பால்குடிபாவா செங்கற்பணியாகச் செய்து குறைவேலையில் விட்டிருக்கிறார். அதில் அரசுமுதலிய செடிகள் முளைத்திருப்பதைச் சோதித்துத் திருத்தி, அதிலிருந்தே கட்டுவது நோக்கம். அதன் செலவு மதிப்பு ரூபா 4000.

5. சுவாமிகோவில்—மூலஸ்தானமாகிய இரகசியம் சுற்றிச்செங்கற்சுவரும் மேலே மர உத்திரம் கைமரம் சலாகைகளும் மண் ஓடும் உள்ளதாயிருக்கிறது. அதிற் பலபழுதுகளை உண்டாகிச் சிலகாலத்துள் முழுவதும் பழுதுபடத்தக்க நிலைமையில் இருக்கிறது. ஆதலால், முன்னுள்ள கட்டிடத்திற் கைவைக்காமல் சுற்றிச் சுவர் எழுப்பி அதன்மேல் இரும்பினால் உத்திரக்கம்பிகள் போட்டு மேலே செய்து, செப்போடு வேய்ந்து, பழையசபையின்மேலே மூடிக்கட்டிமுடிப்பதுநோக்கம். பக்கமண்டபங்களைக் கருங்கற்றூண் நிறுத்திமேலே கருங்கல்லாற் பாவுகல்போட்டு முடிக்கவும், முன்மண்டபம் முழுவதும் கருங்கற்பணியாய் வேறுவேலை செய்யவும் மேலே ஓடு போட்டு முடிக்கவும் நோக்கம். அதன்மதிப்புரூபா 40000.

6. விடுதிமண்டபங்களும், கடைகளும்— திருப்பணிசெய்யுங்காலத்திலே வேலைசெய்பவர்களும் செய்விப்பவர்களும் தங்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 1
P. M. DIST - TAMIL NADU
Digitized By Roja Muthiah Research Library INDIA

குதற்கேற்ற விடுதிச்சாலைகள் அமைந்த சில கட்டிடங்கள் கட்டவேண்டியிருக்கின்றது. பின்பு அவற்றைக் கடைகளுக்கும் யாத்திரைவாசிகள் தங்குதற்கும் உபயோகமாக்கலாம். இதற்குமதிப்புரூபா 10000.

7. கோவிலையும் வீதிகளையும் சுற்றியுள்ள இடங்கள் காடாயிருப்பதால் அந்த இடங்களைத் திருத்தித் துப்புரவாக்கி நல்ல வசதிப்படுத்தவேண்டும். இதன்மதிப்பு ரூபா 2000.

இத்திருப்பணிகள் ஆவசியகம் நடக்கவேண்டியவையாயிருக்கின்றன. அச்செலவில் நானும் ஒரு பாகம் ஏற்பதாய்ச் சங்கற்பித்திருக்கிறேன். கதிர்காமதலத்திற் பத்தியுள்ள மற்றைத்தருமசீலர்களும் இத்திருப்பணி நிறைவேறும்படி இவற்றுள் ஒருபகுதியை ஏற்று நடத்துமாறு கேட்கிறேன்.

அத்தலத்தில் அன்புவளர்ந்து திருப்பணிவேலைகளை நடத்துவிப்பதில் யாவர்க்கும் மனக்கிளர்ச்சி யுண்டாகவேண்டியே இக்கதிர்காமபுராணத்தை அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினேன்.

அன்பர்கள் இப்புராணத்தை யோதிக் கதிர்காமமகிமையையுணர்ந்து அங்கு ஆகவேண்டிய திருப்பணிவேலைகளை நடத்துவித்துக் கதிர்காமநாதருடைய திருவருளைப் பெற்று உய்வார்களாக.

அயோத்திபா.
கொழும்பு

க. நமசிவாயம்.

Digitized By Roja Muthiah Research Library

# முகவுரை.

கதிர்காமம் என்னுந்தலம் இலங்கையின்தென்பாகத்தி லுள்ளது. இலங்கை பரதகண்டமாகிய புண்ணிய பூமியின் ஒரு பகுதியாயும், "சிவபூமி"யாயும், விராட்புருடனுக்கு இடை நாடியாயும் விளங்கும். இலங்கையின்பெருமை வேதாகமபுராணேதிகாசங்களிலே மிகவெடுத்துச் சொல்லப்படுகின்றது. இலங்கையென்னுஞ்சொல்லுக்குச் சமுத்திரநடுவிலிருப்பது என்பதுபொருளாம். இத்தேசம் சமுத்திர மத்தியிலிருத்தலால் இதற்கு இலங்கையென்று பெயராயிற்று. இலங்கையின் பல பாகங்கள் கடலுள் அமிழ்ந்தி அழிந்துபோயின. இப்பொழுதுள்ள இலங்கை இலங்கையின் ஒருபகுதியாகும்.

இலங்கை முன்னே குபேரனுக்குஉரியதாய்ப் பலவளங்களும் பெற்றிருந்தது. பின்பு இராவணனாலே கைப்பற்றப்பட்டு அவனுக்கு உரியதாயிருந்தது.

இலங்கையிலே ஆயிரத்தெட்டுச் சிவஸ்தலங்களும், சில சுப்பிரமணியதலங்களும், விஷ்ணுஸ்தலங்களும் இருந்தனவென்று புராணத்தால் வெளியாகின்றது.

Digitized By Roja Muthiah Research Library

திருக்கோணமலை, திருக்கேதீச்சரம், கீரிமலை, சம்பேசுர ம், வாரிவனம், முனீச்சரம் முதலியன சிவஸ்தலங்கள். கதிர் காமம், கார்கேசன்றுறை, கந்தவனம், கந்தசாமிமலை, கண்ட கிவடகாந்தாரம், உவந்தமலை முதலியன சுப்பிரமணியஸ்தலங் கள். வல்லிபுரம், பொன்னாலயம் முதலியன விஷ்ணுஸ்தலங் கள்.

திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் இரண்டு தலங்களும் தமிழ்வேதமாகிய தேவாரப்பதிகம் பாடப்பெற்ற தலங்கள். கதிர்காமம் திருப்புகழ் பாடப் பெற்றதலம். திருப் புகழாவது சுப்பிரமணியசுவாமி வரப்பிரசாதியாயிருந்த அ ருணகிரிநாதராலே பாடப்பெற்ற தோத்திரம். இது அருள்வா க்காகும்.

கதிர் காமம், ஜோதிஷ்காமம் அம்சுகாமம் என்பன அத் தலத்தின் திருநாமங்களாம். கதிர்காமம் என்பது தமிழ்மொ ழி. ஜோதிஷ்காமம், அம்சுகாமம் என்பன சம்ஸ்கிருதமொழி கள். கதிர், ஜோதி, அம்சு என்னுஞ்சொற்களுக்கு "ஒளி" என்பது பொருளாம். காமம்-கிராமம். கதிர்காமதலத்தில் உள் ளமலை சோதிவடிவாயிருத்தலால், அம்மலைக்குக் கதிர்காமமலை ஜோதிஷ்காமகிரி அம்சுகாமாத்திரி என்னும் பெயர்களும், அ ச்சோதிமலை விளங்குந்தலத்துக்குக் கதிர்காமம், ஜோதிஷ்காம ம் அம்சுகாமம் என்னும் பெயர்களும் உள்ளனவாயின. அரு ணாசலம்போலக் கதிர்காமமலையும் சோதிவடிவினதாகும். அம் மலை சோமசூரியாக்கினிகளென்னும் முச்சுடர்களின் சோதி பெற்று அவற்றின் வடிவினதாய் விளங்குமென்று இப்புராண த்தின் கதிர்காம சயிலமான்மியப் படலத்திலே விளங்குகி ன்றது.

கதிர்காமமலையின்மேலே சிறந்த சிந்தாமணி யென்னும் ஆலயம் ஒன்றிருப்பதாய்க் கதிர்காமகிரிப்படலத்திலே விள ங்குகின்றது. அவ்வாலயம் இக்காலத்துச் சென்று தரிசிக்க

Digitized By Roja Muthiah Research Library

இயலுவதில்லை. ஆயினும் அம்மலைமேல் ஓர் ஆலயம் உண்டெ
ன்பதை விசுவசித்துச் சனங்கள் அங்கேறிப்போய் ஒருவகை
யாக வணங்கிவருகின்றனர். கதிர்காமதலத்தில் இப்பொழுது
யாவராலுங் கண்டுவழிபடப்படும் ஆலயமே "ஏமகூடம்" என
ப் புராணத்திற் சொல்லப்படும் பாசறையாம்.

கதிர்காமதலத்தின் மகிமை பதினெண் புராணங்களுள்
ஒன்றாகிய காந்தமகாபுராணத்திலே தக்ஷிணகைலாசமான்மிய
முரைக்குமிடத்திலே சொல்லப்பட்டது. தக்ஷிணகைலாசம் எ
னப்படுவது திருக்கோணமலை. திருக்கோணமலையை யுள்ளிட்
டு இலங்கையிலேயுள்ள தலங்களின் மகிமைகளை யெடுத்துரை
க்கும் புராணம் தக்ஷிணகைலாசமான்மியம் எனப்படும். அம்
மான்மியம் இருபத்தேழு அத்தியாயங்களோடு கூடியது.
அதில் ஒன்பது பத்து பதினொன்று ஆகிய மூன்று அத்தியாய
ங்களிலே கதிர்காமமகிமை சொல்லப்பட்டிருக்கிறது. அப்புரா
ணம் வடமொழியிலுள்ளது. அதனால் வடமொழியுணர்ச்சியி
ல்லாத தமிழ்மாந்தர் அப்புராணத்தையோதிக் கதிர்காமமகி
மையை அறிந்து கொள்ள இயலாதாயிற்று. அநேகர்க்குக்
கதிர்காமதலத்தின் முன்வரலாறுகளும் அவ்வரலாறுகள் அட
ங்கிய புராணமும் இன்னதென்பது தெரியமாட்டாது. பொது
வகையால் அத்தலம் மகாமகிமைபொருந்தியது என்பதும் பல
அற்புதங்களோடுகூடியது என்பதும் எல்லார்க்குந்தெரியுமா
யினும், அதன் முன்வரலாறுகள் தெரியவேண்டியதும் ஆவசிய
கமேயாம். அப்படித்தெரிவதனால் அத்தலத்தின்மேற் பத்திமி
கவளரும்.

கதிர்காமபுராணத்தைத் தமிழ்மொழியில்மொழி பெயர்ப்பித்
து எவரும் உணர்ந்துகொள்ளும்படி வசனரூபமாக இயற்று
வித்து அச்சிற்பதிப்பித்து வெளியிட்டவர்கள், கீரிமலை யென்
னுந்தலம் இக்காலத்து மேலோங்க ஏதுவாயிருந்தவரும், கீரி

மலைச்சிவாலயத்திருப்பணிக்குப் பேருதவிபுரிந்தவரும், அங்கு சிறந்த மடாலயம் ஒன்று கட்டுவித்து எவர்க்கும் பேருபகாரமாய் நடத்துபவரும், இன்னும் பலதருமங்கள்புரிந்த பெரும் புண்ணியசீலருமான ஸ்ரீமத். கதிரைவேற்பிள்ளையவர்களுடைய குமாரரும், சமாதான நீதிபதியும், அரசாட்சியாரின் துறைமுக அதிகாரசங்கத்து அங்கத்தவருள் ஒருவரும், கொழும்பு ஷங்காய் வங்கியின் தலைமைச்சிருப்பருமாகிய ஸ்ரீமாந் க. நமசிவாயம் அவர்கள்.

இப்புராணத்தை வடமொழியிலிருந்து தமிழ் மொழியில் மொழிபெயர்த்தற்கு உதவிபுரிந்தவர் பண்டிதசிகாமணியாகிய பிர்ம்மஸ்ரீ சர்வேசுவரசாஸ்திரிகள் அவர்கள்.

கதிர்காமதலத்தில் இப்புராணகாலத்துக்குப் பின்னே நடந்த முத்திலிங்கசுவாமிகள் சரித்திரம்போன்ற அற்புதசரித்திரங்கள் பலவுள்ளன. அவை யாவும் கன்னபரம்பரையாய் வழங்கிக்கொண்டிருக்கின்றன. புராணத்திற் சேர்ந்திராமையால் அக்கதைகள் இங்கே வந்தில.

கதிர்காமதலத்தில் இப்பொழுதும் பல அற்புதங்கள் அவ்வப்பொழுது நடந்துவருகின்றன. அவற்றை அநேகர் அநுபவத்தில் அறிந்திருக்கிறார்கள். கதிர்காமம் என்னும்பெயர் கேட்டமாத்திரையே எவர்க்கும் அன்பும் அச்சமும் தோன்றும். கலிகாலத்தில் மகாஅற்புதமாய் விளங்குந் தலம் இதுவேயாம்.

வித்துவான்

**சி. தாமோதரம்பிள்ளை.**

யாழ்ப்பாணம்.

Digitized By Roja Muthiah Research Library

உ

சிவமயம்.

# கதிர்காம புராணம்.

## நைமிசப்படலம்.

புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலே தவத்தினால் மிக்க முனிவர்களுக்கு உறைவிடமாய்ப் பலவகை வளங்களும் நிறைந்து விளங்கும் நைமிசவனத்திலே, சௌனகர் முதலிய முனிவர்கள் யாவரும் ஒருநாள் உதயகாலத்திலே ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்திய கருமங்களை முடித்துச் சித்தசுத்தியோடு வீற்றிருந்து, கதிர்காமதலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருங்கருணைப் பிழம்பாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளை உள்ளத்தில் இருத்தி அனலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கரைந்துருக அன்பும் ஆனந்தமும் உடையவராய், இவ்வுலகத்தில் யாவராலுந் துதிக்கப்பட்டு இணையின்றி விளங்கும் மகிமைபொருந்திய கதிர்காமதலத்தின் அரிய புராணத்தினைக் காதுறக் கேட்டுப் புண்ணியம் பெறவேண்டுமென்னும் பேரவாக்கொண்டு, அதனை எடுத்துச்சொல்ல வல்ல மகாமுனிவராகிய சூதனை மனத்தில் நினைத்தார்கள்.

அப்பொழுது சூதமகாமுனிவர் நைமிசாரணிய முனிவர்களது உள்ளக்கருத்தை யுணர்ந்து மனமகிழ்ச்சியோடு எழுந்தருளி, விபூதியும் உருத்திராக்கமும் சடாமுடியும் உடையவராய்க் கையிலே தண்டு கமண்டலங்கள் விளங்க அந்த நைமிசவனத்தை யடைந்தார்.

Digitized By Roja Muthiah Research Library

குளிர்ந்த செந்தாமரைபோல மலர்ந்த முகத்தோடும் அங்கு எழுந்தருளி வந்த சூதமுனிவரை நைமிசாரணிய முனிவர்கள் கண்டு, இருக்கைவிட்டெழுந்து சிரசின்மேல் அஞ்சலியாகக் குவித்த கையராய் எதிர்சென்று வணங்கி அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி, முனிவர்பெருமானே, தேவரீர் இன்று இங்கு எழுந்தருளுதற்கு முற்பிறவிகளிலே நாங்கள்செய்த பெருந்தவம் யாதோ! தேவரீர் எழுந்தருளப்பெற்றதனால் இத்தினம் எங்களுக்கு ஒரு புண்ணியதினமாயிற்று. இப்பிறவியை அடைந்ததனால் ஆகிய பயன் உலகத்திலுள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றன் மகிமைகளைக் கேட்டு அவைகளை வழிபட்டு உய்தலேயாம்.

தேவரீர் முன்பு பல தல மகிமைகளை எடுத்துச் சொல்லக்கேட்டுப் புண்ணியப்பேறடைந்திருக்கிறோம். இன்று சிவகுமாரராயும் தாரகன் சிங்கன் சூரபன்மன் முதலிய தானவர் யாவரையுஞ் சங்கரித்து இந்திரன் சயந்தன் முதலிய தேவரை வாழ்வித்து விண்ணகங் குடியேற்றியருளிய கருணாநிதியாயுமுள்ள சுப்பிரமணியக்கடவுளுக்கு உவந்த தலமாகிய கதிர்காமத்தின் மகிமையைக் கேட்டு ஆனந்தமடையும் பேரவாவுடையேம். சகல கலைகளையும் ஒருங்குணர்ந்த வேதவியாச முனிவரிடத்திலே பதினெண் புராணங்களையும் ஓதி அப்புராணங்களுக்கு ஓர் ஆகரமாய் விளங்கும் தேவரீர் அக்கதிர்காம புராணத்தை அடியேங்கள் உய்யுமாறு விரித்துச் சொல்லியருளல்வேண்டுமென்று இரந்தனர்.

சூதமுனிவர் அதுகேட்டு ஆனந்தபரவசராய் உரோமஞ்சிலிர்ப்ப இரண்டுகண்களினின்றும் நீர் தாரைதாரையாய் ஒழுக அஞ்சலியஸ்தராய் இருந்து கதிர்காமதலத்தை உள்ளத்திலே சிந்தித்து வணங்கி, அளவில்லாத தவத்தைச்செய்து திருவருள்வழி யொழுகும் முனிவேந்தர்காள், அடியேன்

Digitized By Roja Muthiah Research Library

றூற்பிறப்பிற்செய்ததவமே பெருந்தவம். உலகத்திலுள்ள தலங்களெல்லாம் மிகச் சிறந்து மகாமகிமைபொருந்தி விளங்கும் அற்புததலமாகிய கதிர்காமத்தின் மகா புராணத்தை இன்று உங்களுக்கு எடுத்தோதும் பெரும்பாக்கியம்பெற்றேன். சொல்லுகின்ற யானும் கேட்கின்ற நீங்களும் மற்றுமுள்ள உலகத்தாரும் பெரும் புண்ணியத்தை யெய்துதற்குரிய மகிமை பொருந்திய தலமாகிய கதிர்காமத்தின் புராணத்தையே கேட்க விரும்பினீர்கள். ஆயிரமுகமும் இரண்டாயிர நாவுமுள்ள ஆதிசேடனாலும், நான்கு வேதங்களையும் பதினெண்புராணங்களையும் இதிகாசங்களையும் மநுமுதலிய தருமநூல்களையும் ஓதியுணர்ந்த நான்முகனாலும் இயம்புதற்கரியது அக்கதிர்காமதல மகிமை. அதனை ஆதியிலே கைலை மலையில் வீற்றிருக்கும் பரமசிவன் பார்வதிதேவியாருக்கு அருளிச்செய்தார். பின்பு விட்டுணுமூர்த்தி ஆதிசேடனுக்கும் கருடனுக்கும் உரைத்தார். இந்திரனுக்குப் பிரமதேவர் கூறினார். விநாயகர் தமது கணங்களுக்கு உரைத்தார். சுப்பிரமணியர் அகத்தியருக்கு உரைத்தார். பிருங்கிமுனிவர் நாரதமுனிவருக்கு ஓதினார். மகாகாளர் பிருகுவுக்கு உரைத்தார். கௌசிகருக்குக் காசிபர் உரைத்தார். ததீசி கண்ணுவருக்கும் புலகருக்கும் உரைத்தார். சைமினி குருக்ஷேத்திர வாசிகளுக்குக் கூறினார். மார்க்கண்டேயர் மற்றுமுள்ள முனிவர்களுக்கு உரைத்தார். பராசர் வேதவியாசருக்கு உரைத்தார். நந்திதேவர் சனகாதிகளுக்கு உரைத்தார். வேதவியாசர்சுகருக்கும்துர்வாசருக்கும்உரைத்தார். இவ்வாறுபரமசிவனாலும் தேவராலும் முனிவராலும்உரைக்கப்பட்டுப்பாரம்பரியத்தில வந்தது அக்கதிர்காம புராணம். அம்மகா புராணத்தை உங்களுக்கு யான் சொல்லுகின்றேன். மெய்யன்போடுகேட்கக்கடவீர்கள் என்று சொல்லத்தொடங்கினார்.

நைமிசப்படலம் முற்றிற்று.

# திருவவதாரப் படலம்.

முன்னொரு காலத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் தக்கன் செய்த யாகத்துக்குப் போயிருந்து சிவநிந்தையைக் கேட்டனர். பின் அப்பாவவசத்தினாற் காசிபருக்கும் மாயைக்கும் பிறந்த புத்திரர்களாகிய சூரபன்மன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர்களாலே துன்பஞ் செய்யப்பட்டு அரசிழந்தனர். இந்திரகுமாரனாகிய சயந்தனும் மற்றைத் தேவரும் சிறையிடைப்பட்டு வருந்தினார்கள். அத்தேவர்கள் அசுரர் செய்த கொடுமைகளைச் சகிக்கலாற்றாதவராய் வேறு புகலிடங் காணாமல் மயங்கி, முடிவில் எல்லாவுயிர்க்கும் உயிராய் நின்று படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களை இயற்றி அவ்வுயிர்களது மலம் மாயை கன்மங்களைப் போக்கி ஆட்கொண்டருளும் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கைலாயமலையை யடைந்து, திருநந்திதேவரை வழிபட்டு அவருடைய அநுமதிப்படி சிவ சந்நிதியிற்போய் வணங்கி, "எம்பெருமானே, அசுரர் செய்யுந் துன்பத்தைப் பொறுக்கமுடியாமல் இங்கு தேவரீருடைய திருவடிகளையே புகலிடமாகக் கருதி அடைக்கலம் புகுந்தேம். எங்கள்மேற் கருணைபூத்து அவ்வசுரரைச் சங்கரித்து எங்களைக் காத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். விருப்புவெறுப்பின்றி அவரவர் கன்மங்களை நாடி அவ்வப்பொழுது அவரவர்க்கு ஊட்டியறுத்தருளும் பெருங்கருணைப்பிழம்பாகிய சிவபெருமான், அவர்மேல் அருள் சுரந்து ஆறு திருமுகங்கள் உள்ளவராய வீற்றிருந்து, ஆறு திருமுகங்களினும் உள்ள நெற்றிக்கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை யுய்த்து அவைகளைக் கங்கைநதியிலே கொண்டு போய்விடும்படி வாயுதேவனுக்கும் அக்கினிதேவனுக்குங்கட்டளையிட்டருளினார் அவ்வாணையை மேற்கொண்டு அவ்விருவ

Digitized By Roja Muthiah Research Library

ரும் சிரசின்மேலே சுமந்து சென்று அத்தீப்பொறிகளைக் கங்கையிலே விட்டனர். அக் கங்கைநதி அவைகளைச் சரவணப் பொய்கையிலே செலுத்த, அப்பொறிகளாறும் ஆறுகுழந்தைகளாய் வடிவங்கொண்டு அத்தடாகத்திலிருந்து கார்த்திகைமாதர் ஊட்டிய பாலுண்டு வளர்ந்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

பின்பு சிவபெருமான் உமாதேவியாரோடு அங்கு எழுந்தருளி உமாதேவியாருக்கு அவர்களைக் காட்டியருள, உமாதேவியார் மனக்களிப்போடு அவ்வறுவரையும் இருகைகளாலும் ஒருங்கே சேர்த்து வாரியெடுத்தனர். அவ்வாறுருவும் ஒருருவாய்ச்சேர்ந்து ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருவிழிகளும் பன்னிரண்டு திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் உள்ள ஓருருவாய் விளங்க, உமாதேவியார் கருணைபூத்து எடுத்து அணைத்து உச்சி மோந்து பாலூட்டிச் சிவபெருமானிடத்திலே கொடுக்க, அவரும் மனமகிழ்ந்து இடபவாகனத்தின்மீது தமக்கும் உமாதேவியாருக்கும் நடுவிலிருத்தி எடுத்துக்கொண்டு திருக்கைலாய மலையையடைந்து எழுந்தருளியிருந்தார்.

முன்னே இத்தீப்பொறிகள் சிறுவராய் உங்களைக் காத்தருளும் என்று அபயங்கூறி விடை கொடுத்தனுப்பப்பெற்ற தேவர்கள் அசுரர்களால் மிகமெலிந்து வாடி மீண்டும் அக்கைலையை யடைந்து "எம்பெருமானே, இனி ஒரு கணப்பொழுதாயினும் அவ்வசுரர் செய்யுந்துன்பங்களைப் பொறுக்கமாட்டோம், எங்கள்மேல் அருள் சுரந்து காத்தருளல்வேண்டும்" என்று இரந்தார்கள். அதுகேட்ட முதல்வன் திருவுள்ளமிரங்கி முருகக்கடவுளை நோக்கி "மைந்தனே, நீ இத்தேவர்களுக்கு அதிபதியாய்ச் சென்று சூரபன்மன் முதலிய அசுரர் கிளையை வேரறுத்து விண்ணகங் குடியேற்றித் தேவர்களைக் காக்கக்கடவாய்" என்று கட்டளை யிட்டருளி, நவசத்திகளின்வர

Digitized By Roja Muthiah Research Library

யிலாகத்தோன்றிய வீரவாகுதேவர்முதலிய இலக்கத்தொன்பது வீரரையும், பூதகணங்களையும், சேனைகளாகக் கொடுத்து, சத்திவடிவாகிய வேலையும், பதினொரு உருத்திரர்வடிவாகிய ஆயுதங்களையும் அளித்து அனுப்பினார்

சுப்பிரமணியப் பெருமான் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் விளங்க, தோமரம் கொடி வாள் குலிசம் அங்குசம் அம்பு மணி பங்கயம் தண்டம் வில் மழு வேல் என்னும் பன்னிரண்டு ஆயுதங்களையுந்தாங்கி இரதத்திலேறி. வாயுதேவன் சாரதியாக விருந்து செலுத்த, இந்திரன் முதலிய திக்குப்பாலர்களும், முனிவரும், வீரவாகுதேவர் முதலான இலக்கத்தொன்பது வீரரும், நூற்றெட்டுப் பூதசேனாபதிகளும், இரண்டாயிர வெள்ளம் பூதசேனையும் சூழ்ந்துவர அக்கைலைமலையை விட்டு நீங்கி மாயாபுரியை யடைந்தார்

திருவவதாரப்படலம் முற்றிற்று.

# தாரகாசுரன் வதைப்படலம்.

அம் மாயாபுரிக்கு அரசனும் சூரபன்மனது தம்பியும் ஆகிய தாரகன் கிரவுஞ்சாசுரனைத் துணையாகக்கொண்டு அங்கிருத்தலால் அவனைச் சங்கரிக்க வேண்டுமென நாரதமுனிவர் வேண்ட, அதற்கிசைந்து அவனைச் சங்கரிக்கும்படி வீரவாகுதேவர் முதலான வீரர்களோடு மாயாபுரிப் பட்டணத்தினுள்ளே புகுந்தருளினர்.

அப்பொழுது பூதசேனை யாவும் நகரத்தினுள்ளே நுழைந்து அங்குள்ள அவுணர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்தனர்.

Digitized By Roja Muthiah Research Library

அதனைத் தூதுவர் அறிந்து தாரகாசுரனது அரசிருக்கை மண்டபத்திற் சென்று வணங்கி, அண்ணலே, கைலாய பதியாகிய சிவனது குமாரன் கந்தனென்னும் பெயருடையோன் பூதசேனைகளோடு யுத்தம்புரியுங் கருத்துடையவனாய் இங்கே வந்தனன் அவனது சேனைகள் வந்து நமது நகரத்தையழிவு செய்தன என்று முறையிட்டார்கள்.

அதுகேட்ட தாரகன் சினங்கொண்டு எழுந்து பரிசனங்களை அழைத்து எனது தேரைக்கொண்டுவாருங்களென்று கட்டளையிட அவர்கள் அவ்வாறே கொண்டுவந்தனர். தாரகன் அவ்விரதத்திலேறி மந்திரிகள் சூழ இரதகசதுரக பதாதிகளோடு பல படைக்கலங்கள் தாங்கிச்சென்று முருகக்கடவுளை எதிர்த்தான். அதுகண்ட பூதசேனைகள் அவுணரோடு எதிர்த்துப் போர்செய்தார்கள். அப்பொழுது தாரகன் தனது துதிக்கையை நீட்டி இலக்க வீரரையும் ஒன்றாகச்சேர்த்தெடுத்துக் கடலின்மீது எறிந்தான். அவர்கள் கடலில் வீழ்ந்து எழுந்து கரையேறி ஒரு பக்கத்தில் ஒதுங்கிப்போயினர். வீரகோளரியென்போன் அதனை நோக்கிச் சினங்கொண்டு வில்லை வளைத்து நூறு கணைகளையேவி அத்தாரகனுடைய முடியை வீழ்த்தினான். அவன் கோபங்கொண்டு கையிலிருந்த தண்டத்தை வீரகோளரிமேல் எறிந்தான். அத்தண்டமானது வீரகோளரியின் மார்பிலே பட அவன் மயங்கி வீழ்ந்தான். மற்றுள்ள வீரரும் வீரவாகுவும் அவ்வசுரனை எதிர்த்து யுத்தஞ் செய்தனர். அப்பொழுது அவ்வசுரன் பல படைகளை ஏவ வீரவாகு அவைகளை அழித்து அவனைப் புறங்காட்டியோடும்படி செய்து பின்பு பாசத்தினாற் கட்டிக்கொண்டு போகும்படி தொடர்ந்து செல்ல, அத்தாரகன் மாயாவலியுடைய கிரவஞ்சகிரியினுள்ளே சென்று ஒளித்தான். வீரவாகு அவன் சென்ற வழியே தொடர்ந்து செல்லுதலும், அம்மலை சூரியகிரணஞ் செல்லாத இருட்பூமிபோன்றிருந்தது. அதனால் அங்கே நுழைந்த தாரகனை

க்காணாமலும், மீண்டு வருதற்குரிய வழியை யறியாமலும் வீர வாகு மயங்கி நின்றனர். கிரவுஞ்சாசுரன் அவரை அங்கே மோகநித்திரை செய்யும்படி யாக்கினான். வீரவாகுவைக் காணாதவராய் மனநொந்து இளையோரெண்மரும் இலக்க வீரரும் பூதசேனையும் அவரைத் தேடி அவர் போனவழியே சென்று அம்மலையினுள் நுழைய அவரனைவரையும் அக்கிரவுஞ்சாசுரன் மோகநித்திரையுள் ஆழ்த்தினன் அவர்கள் யாவரும் அவ்வாறு அகப்பட்டது கண்டு தாரகன் வெளிப்பட்டு ஓர் இரதத்திலேறி யுத்தகளஞ் சென்று வில்லை வளைத்து நாணொலி செய்து பூதசேனைகள்மேல் அம்புகளைத் தூண்டி ஆர்ப்பரித்தலும் பூதர்கள் அஞ்சி நாற்றிசையினும் ஓடினர்

முருகக்கடவுள் இவைகளை யுணர்ந்து பூதசேனைகள் சூழ இரதத்தைச் செலுத்தி அத்தாரகனிருக்கு மிடத்தை யடையப் பூதர்கள் தானவசேனையை எதிர்த்து யுத்தஞ்செய்தனர். சுப்பிரமணியக்கடவுள் தாரகனை எதிர்த்தனர். இருவரும் ஆயிரம் ஆயிரமாகிய கணைகளை ஒருவர்மேல் ஒருவர் தூண்டி யுத்தஞ் செய்தனர் பின்பு தாரகனது வில்லை முருகக்கடவுள் ஒரு கணையினாலே துண்டமாக்கினார். தாரகன் மற்றோர் வில்லை யேந்தி யுத்தஞ்செய்தான் இவ்வாறு இருவர்க்குமிடையிலே பலவிதமான யுத்தங்கள் நடந்தன. இப்பெரிய போரினாலே இருவரும் பெருங்கோப முடையவராய்ப் பகிரண்டத்தையடைந்து அங்கே பெருஞ் சமர் விளைத்தனர். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் இருவரையுங்காணாதவராய் அச்சங்கொண்டு பெருங் கவலையோடு ஆறுமுகக்கடவுளுடைய திருவடிகளைச் சிந்தித்து அவருக்கு மிகப் பிரீதியுள்ளதும், கார்த்திகை விரதத்தை யொத்ததும், மிக்க பலனை யளிக்கத் தக்கதும், மேன்மை யுடையதுமான சட்டிவிரதத்தைத் தொடங்கி, மண்டலம் கும்பம் விம்பம் என்னும் மூன்றிடத்தும் சட்டிவரையிலே கற்பவிதிப்படி மந்திரத்தோடு ஆறுமுக

Digitized By Roja Muthiah Research Library

கடவுளைப் பூசித்து வழிபட்டு வந்தனர். அக்கடவுள் அங்கு பிரசன்னமாகி, உங்கள் விரதத்தையும் பூசையையும் ஏற்று மகிழ்ந்தோம், உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்களென்ன "சுவாமி, கொடியோனாகிய இத்தாரகனைச் சங்கரித்து எங்களைக் காத்தருளல் வேண்டு'மென்று பிரார்த்தித்தனர். கடவுள் அத்தேவர்கள்மேலே திருவருள்கூர்ந்து, அஞ்சாதீர், அவ்வாறே நாம் செய்கின்றோமென்று திருவாய் மலர்ந்தருளி, அத்தாரகனை எதிர்த்துச் சமர்செய்தார் இருவரும் எதிர்த்து யுத்தஞ்செய்யுங்காலையில் நான்முகன்படை நாரணன் படை முதலியவைகளைத் தாரகன் ஏவ அவை முருகக்கடவுளது பாங்கரில் வந்து நின்றுவிட்டன. பின் சிவப்படையை ஏவினான். அதனை முருகக்கடவுள் செங்கையாற் பற்றினார். தாரகன் இனி மாயையால் வெல்ல வேண்டுமென்று கிரவுஞ்சாசுரனைத் துணையாகக்கொண்டு பல மாயைகள் செய்தான். ஆறுமுகக்கடவுள் வேற்படையை நோக்கி இத்தாரகனையும் கிரவுஞ்சத்தையும் அழித்து வீரவாகு முதலாயினோரை விரைவிலே கொண்டுவருவாயாக வென்று ஏவினார். அவ்வேற்படை விரைந்து சென்று தாரகனது மார்பைப் பிளந்து கிரவுஞ்சத்தைத் தூளாக்கி அங்கே துயில்கின்ற வீரரையெழுப்பி ஆகாயகங்கையில் ஆடிப் புனிதமுற்று மீண்டுவந்து ஆறுமுகக் கடவுளது திருக்கரத்தில் வீற்றிருந்தது. அது கண்டு பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்துப் பூமாரிபொழிந்து தோத்திரஞ்செய்தனர். பின்பு வீரர் யாவரும் மயக்க நீங்கியெழுந்து வந்து குமரவேளைச் சூழ்ந்து துதித்தனர். அந்த யுத்தத்தில் இறந்த பூதசேனைகளை எழுப்பிக்கொண்டு முருகக்கடவுள் செருநில மகன்று சென்றனர்.

தாரகாசுரன் வதைப்படலம் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

## வழிநடைப்படலம்.

பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவரும் இலக்கத்தொன்பது வீரரும் பூதரும் புடைசூழ அச்செரு நிலத்தை விட்டு நீங்கித் தென்றிசையை நோக்கிச் செல்லும்போது, சூரியன் மேற்றிசையை யடைய முருகக்கடவுள் தேவகிரியை யடைந்தார் மாலைக்காலமும் நீங்கிச் சந்திரோதயமாயிற்று. அப்பொழுது அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவரும் கந்தமூர்த்தியுடைய பாதங்களை வணங்கி "எந்தாய், கொடியதாரகன் செய்த துன்பங்களால் இதுவரையில் நொந்து வருந்தினோம். அவனைக் கிரவுஞ்சகிரியோடு முடியும்படி அழித்தீர். அடியேம் பெற்ற மகிழ்ச்சி காரணமாகத் தேவரீரைப் பூசித்து வழிபடல் வேண்டுமென்னும் அன்புடையோம். அதற்கு விடைகொடுத்தருளல் வேண்டு" மென்று இரக்க, முருகக்கடவுள் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தனர் பின்பு அக்கடவுளுடைய கட்டளைப்படி தெய்வத்தச்சன் அழகிய ஒரு நகரத்தையும் அதன் நடுவிலே சிறந்த ஒரு கோவிலையும் நிருமித்தான். கந்தமூர்த்தி தேவரும் வீரரும் பூதரும் ஒருங்குவர அக்கோவிலை அடைந்து இரத்தினங்களால் இழைக்கப்பட்ட அழகிய ஒரு சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தருளினார். தேவர்கள் யாவருங்கூடி அக்கடவுளைப் பூசிக்கும் பொருட்டுக் கங்காநதியை மனத்தில் நினைத்தனர் அவ்வாறே அந்நதியும் வந்து சேர்ந்தது. தேவரும் முனிவரும் அக்கங்கா தீர்த்தத்தினாலே மஞ்சன நீராட்டிப் பொன்னுடை சாத்தி அழகிய பூமாலைகளைச் சூட்டிச் சந்தன முதலிய வாசனைப்பொருள்களைத் திருமேனியிலே யணிந்து தூபதீப முதலிய பலவகையுபசாரங்களாலும் ஆறுமுகக்கடவுளைப் பூசித்தனர். பின்பு அன்போடு பல தோத்திரங்களைச் சொல்லித் துதித்து வணங்கினர். கடவுள் அவர் செய்த பூசையை ஏற்று மகிழ்ந்து அவர்க்கு அருள் புரிந்தனர்.

Digitized By Roja Muthiah Research Library

மறுநாள் உதய காலத்திலே சுப்பிரமணிய மூர்த்தி அத்தேவகிரியைவிட்டு நீங்கி யாவரும் புடைசூழச் சென்று, வழியிலே திருக்கேதாரம், காசி, திருப்பருப்பதம், திருவேங்கடகிரி, திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, திருவெண்ணெய் நல்லூர், திருமுதுகுன்றம், சிதம்பரம் முதலாகிய தலங்களைக் கண்டுவணங்கிக் கொண்டு மண்ணியாற்றங்கரையை யடைந்தார். அடைதலும் பகற்காலம் நீங்கி இராக்காலம்வரச் சந்திரனும் உதயமாயினன். அப்பொழுது தேவர்கள் சுவாமியை வணங்கி, அழகிய சோலைகள் பலவுடையதாய்ச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றைத் தன் கரையிலுள்ளதாயிருப்பது இம்மண்ணியாறு. பரிசுத்தமான இந்நதிக்கரையிலே இன்று தங்கியருளல் வேண்டுமென்றனர். கடவுளும் அதற்கிசைந்து விசுவகன்மாவைக்கொண்டு ஒரு நகரஞ் செய்வித்துத் திருச்சேய்ஞலூர் என்றுபெயரிட்டு அந்நகரத்தின் நடுவிலுள்ள திருக்கோவிலிலே தேவர்கள் புடைசூழ வீற்றிருந்தனர். பின்பு தேவர்களுக்காக அமைக்கப்பட்ட இருக்கைகள்தோறும் அவரவர்களை அனுப்பி அன்றிரவு போக்கி, மறுநாள் வைகறையிலே விசுவகன்மாவைக்கொண்டு ஆலயமொன்று குயிற்றுவித்து அதன் நடுவே சிவபெருமானுடைய திருவுருவைப் பிரதிட்டைசெய்து, பஞ்சகவ்விய முதலிய திரவியங்களினாலே அபிஷேகஞ்செய்து, பொன்னுடை, இரத்தினாபரணம், பூமாலை முதலியவைகளையுஞ் சந்தன முதலிய வாசனைப் பொருள்களையும் அணிந்து, பலவகை அன்னங்களை நைவேதனஞ் செய்து, தாம்பூலம் அருத்தித், தூபதீபங்களால் ஆராதித்து முப்முறை வணங்கித் தோத்திரஞ்செய்தனர்.

அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு இடபாரூடராய் வெளிப்பட்டு "மைந்தனே நீ செய்த பூசையை ஏற்று மகிழ்ச்சிபெற்றோம். சூரபன்மன் முதலிய அசுரர்யாவரை

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
Digitized By Roja Muthiah Research Library, TAMIL NADU - INDIA

யும் அழிக்கும்படி இந்தப் படையை உனக்குத் தருகின்றேம். இது பிரமா விஷ்ணு இந்திரன் முதலாயினோருக்குக் கொடுக்கப்பட்ட படைபோல்வ தொன்றன்று. புவனங்கள் முழுவதையும் ஒரு கணத்திலே முடிவு செய்யும் இயற்கையுள்ளது என்றுகூறி, மகா பாசுபதப்படையை அவருக்கு அளித்து மறைந்தருளினர்.

பின்பு தேவரும் வீரரும் பூதரும் புடை சூழ்ந்துவர இரதத்திலேறி மண்ணியாற்றங்கரையிலுள்ள அத்திருச்சேஞலூரைவிட்டு நீங்கி, திருவிடைமருதூர், திருமயிலாடுதுறை திருப்பறியலூர், திருவிலஞ்சியம், திருவாரூர், திருப்பரங்குன்றம், திருச்செங்குன்று முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருச்செந்தூரை யடைந்தார் அங்கே தேவகம்மியனால் ஆக்கப்பட்ட கோவிலினுள்ளே வீற்றிருந்து, சூரபன்மன் சிங்கமுகன் தாரகன் முதலிய தானவர் பிறந்ததும், தவஞ்செய்ததும், எவராலும் வெல்லற்கரிய பெருவரம் பெற்றதும், பின்பு அரசு செய்ததும், அவ்வசுரர் செய்யும் மாயவஞ்சங்களும், அவர்கள் பெற்ற வெற்றியும், வல்லமையும், மேன்மையும், தேவர்களுக்கு அதுவரையிலே செய்த துன்பங்களும் ஆகிய எல்லாவற்றையும் தேவ குருவாகிய பிரகற்பதியினாலே விரிவாக அறிந்து, இந்திரனுக்கு அபயங்கொடுத்து, வீரவாகுவை அசுரர் தலைவனாகிய சூரபன்மனிடத்துத் தூதுசெலுத்தி அவனுடைய மனக்கருத்தைத் தெளிந்துகொண்டு, மகேந்திரபுரத்துக்கு எழுந்தருளக் கருதினர்.

வழிநடைப்படலம் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

## ஏமகூடப் படலம்.

ஜெயந்திபுரநகரத்திலே திருக்கோவிலினுள் இரத்தின சிங்காசனமிசை வீற்றிருந்த கந்தமூர்த்தி பிரமன் மால் இந்திரன் தேவர் முனிவர் யாவரும் அறியும்படி வீரவாகுவை நோக்கி "சூரபன்மனையும் அவுணப்படையையும் அழித்து அவரால் வருந்துகின்ற தேவரைக்காக்கும்படி மகேந்திரபுரிக்கு நாம் போகவேண்டும். நமது தேரை விரைந்து கொண்டுவருவாயாக" என்றார். தேவர்கள் அதைக்கேட்டு நமது துன்பம் ஒழிந்தது ஒழிந்தது என்று களிப்படைந்து துள்ளினர். ஆடினர், பாடினர். கந்தமூர்த்தியுடைய திருவடிகளை முடிமேற் சூடிக்கொண்டனர். உடனே நந்திகணத்தலைவர் ஒருவர் சென்று மனோவேகமென்னும் பொற்றேரைக் கொண்டு வரும்படி சாரதியைக் கூவ, அவனும் அத்தேரைக்கொண்டு வந்து நிறுத்தினான். முருகக்கடவுள் அந்த இரதத்தின்மேலேறி, தம்மருகில் நின்றமற்றவர்களை நோக்கி, நீங்களும் உங்கள் உங்கள் ஊர்திகளில் ஏறி நம்மோடு வரக்கடவீர் என்றார். உடனே பிரமன் அன்னத்தின் மீதும், மால் கருடன் மீதும், இந்திரன் விமானத்தின்மீதும், மற்றைத் தேவர்கள் தத்தம் ஊர்திகளிலும் ஏறி வந்தனர். வீரவாகுவும் வீரர்கள் எண்மரும் இலக்கத்தோரும் ஒவ்வோர் இரதங்களில் ஏறி வந்து தேவாதி தேவராகிய கந்தமூர்த்தியைச் சூழ்ந்தனர். சுப்பிரன் மேகமாலி சித்திராங்கன் முதலிய பூதசேனாதிபதிகள் நூற்றெண்மரும் வந்து சூழ்ந்தனர். இரண்டாயிர வெள்ளம் பூதசேனைகளும் வந்து சூழ்ந்து ஆர்த்தனர். பேரிதுடி காளம் சல்லரி தக்கை கொம்பு உடுக்கை சங்கம் குடமுழா முதலிய பல வாத்தியங்களைப் பூதர்கள் முழக்கிச்சென்றனர். இவ்வாறு சேனைகள் பலவுஞ் சூழ அந்தர நெறியினாலே சமுத்திரத்தைக்கடந்து அப்பாற் சென்று பலவளங்களும் நிறைந்து விள

Digitized By Roja Muthiah Research Library

ங்கும் இலங்கைமாநகரம் எதிர்ப்பட அதன் சிறப்புக்களை நோக்கிக்கொண்டுபோதலும் மகேந்திராபுரி எதிரே தோன்றிற்று.

அப்பொழுது சங்குசக்கரதாரியாகிய மாலும் பிரமனும் இந்திரனும் கந்தமூர்த்தியின் முன்னே வந்து வணங்கி "எதிரே காணப்படுந் தேசமே சூரபன்மனுடைய மகேந்திராபுரி. கொடிய நீசர்கள் வாழுதலால் அங்கே தேவரீர் செல்லுதல் முறையன்று. அதற்கு அடுத்த எல்லையாகிய இங்கே ஒரு பாசறை வகுத்து இருந்துகொண்டு பின் வேண்டியன செய்யலாம்" என்றனர். கந்தசுவாமி அவ்வாறே யாகுகவென்று திருக்கண்ணோக்கஞ்செய்து தேவகம்மியனை யழைத்து, மாணிக்க கங்கையென்னும் புண்ணிய நதிக்கரையிலே சேனைகளோடு நாம் தங்குதற்கேற்ற பாசறையொன்று வகுப்பாயாக வென்று கட்டளையிட, விசுவகன்மா அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு, இமைப்பொழுதிலே மாடங்களும் கூடங்களும் மண்டபங்களும் கோபுரங்களும் சோலைகளும் வாவிகளும் நிறைந்தவீதிகள் அளவில்லாதன பொருந்த அழகினால் இணையின்றி விளங்கும் சிறந்த ஒரு நகரத்தையுண்டாக்கி, அதன் நடுவில் ஆறுமுகப்பெருமானுக்குரிய ஒரு திருக்கோவிலும் அமைத்து "ஏமகூடம்" என்று அதற்குப் பெயரிட்டான்.

மனத்தால் நினைந்து அவன் முயிற்றிய அந்தநகரத்தையும் பாடி வீடுகளையுங் கந்தவேள் விருப்பத்தோடு மகிழ்ந்து நோக்கிக் கருணைசெய்து, தேரினின்றும் இறங்கிப் பூதர்களை வீதிகடோறும் இருக்கும்படி நியமித்து, பிரமாமுதலிய தேவரும் வீரரும் உடன்வரத் திருக்கோவிலினுள்ளே சென்று; இரத்தின சிங்காசனத்தின்மேல் எழுந்தருளி, இலக்கத்தொன்பது வீரர்கள் அன்போடு போற்றி செய்யவும் தேவர்கள் முறைமுறையாய்ப் பணி செய்யவும் மகிழ்ச்சியோடு அந்த ஏமகூடத்தில் இருந்தருளினார்.

ஏமகூடப்படலம் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# சூரபன்மன் வதைப்படலம்.

சுப்பிரமணியக்கடவுள் ஏமகூடத்தில் வந்திருத்தலைச் சூரபன்மன நாரதமுனிவர் வந்துசொல்ல அறிந்து வடவைத்தீயைப்போலச் சீறி நகைத்து "ஆயிரகோடி யண்டங்களையும் ஒருங்கே யரசாளவல்ல வீரனாகிய என்னை இச்சிறுபாலனே பொருது வெல்லவருபவன். இவனைச் சிறுபாலனென்றெண்ணிவிட்டேன். என் தம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்சகிரியையும் அழித்துவிட்டோமென்று செருக்கினால் இந்நகரத்துக்கும் வந்தனன் போலும். என் மகனாகிய பானுகோபனை அனுப்பி இவனைவெற்றிகொண்டு வரும்படி செய்வேன்" என்று கூறி, தூதரைநோக்கி என் மைந்தனாகிய பானுகோபனைக் கடிதில் அழைத்து வாருங்களென்றான். தூதுவரோடி அவனை யழைத்துவந்தனர். அவன் விரைந்து வந்து சூரபன்மனை வணங்கி, எந்தாய், யான் செய்யவேண்டிய பணியென்னையென்ன, நீ சென்று கந்தனையும் வீரரையும் பூதசேனைகளையும் வென்று என்முன்னே வரக்கடவாயென்றான். பானுகோபன் ஓர் இரதந்திலேறி அசுரசேனைகள் சூழக் கந்தமூர்த்தி யிருக்குமிடஞ்சென்று, வீரவாகுவோடும் மற்றை வீரரோடும் பூதசேனைகளோடும் எதிர்த்துப் பலவிதமான யுத்தஞ்செய்து, அவுணசேனைகளை யிழந்து ஆற்றாது முடிவில்லை தானும் உயிர்மாண்டனன். சூரபன்மனது மைந்தனாகிய இரணியன் என்பவன் வந்து யுத்தஞ்செய்து முடிவில்லை தப்பியோடினான். அக்கினிமுகாசுரன், மூவாயிரமைந்தர், தருமகோபன் முதலாகிய அவுணரும் தத்தஞ்சேனைகளோடு வந்து பலவிதமான யுத்தங்கள் செய்து இறந்தனர்.

சூரபன்மனது தம்பியும் ஆயிரந்தலைகளும் இரண்டாயிரங்கைகளும் உள்ளவனுமான சிங்கமுகாசுரன் தன் சதுரங்க சேனைகளோடு வந்து எதிர்த்து யுத்தஞ்செய்தான். அவனோடு

Digitized By Roja Muthiah Research Library

வீரவாகுவும் மற்றை வீரரும் வந்து போர்புரிந்தனர் இருதிறத்தவரும் பலவிதமான யுத்தங்கள் செய்துகொண்டிருக்கும்பொழுது சிங்கமுகாசுரன் கோபங்கொண்டு வீரவாகுமுதலானவர்களை மாயாபாசத்தினாலே கட்டி உதயகிரியின் சிகரத்திலுள்ள ஒரு குகையிலே கொண்டுபோய் வைத்தான்.

பின்பு சுப்பிரமணியக் கடவுளோடு எதிர்த்துச் சமர்செய்து மாயாரூபங்கொண்டு சேனைகளை விழுங்கினான். அக்கடவுள் கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணேற்றிட்டு ஐந்து பாணங்களைத் தொடுத்து மார்பில் ஒன்றும் நெற்றியில் நாலுமாகத் தைக்கும்படி செலுத்தினார் அப்பாணங்கள் சென்று அவ்வாறு தைத்தலும் அவன் மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். அநேக பாணங்களையேவி அவனுடைய சேனைகளைச் சங்கரித்தார். வீரவாகு முதலான வீரரையும் மாயாபாசத்தினின்று விடுவித்தார். பின்பு சிங்கமுகாசுரன் மூர்ச்சை தெளிந்து எழுந்து பெருங் கோபத்தோடு எதிர்த்துப் போர்புரிந்தான். அறுமுகக்கடவுள் அளவில்லாத பாணங்களையேவி அவனுடைய தலைகளையுங் கைகளையும் ஆயிரத்தெட்டுமுறை அறுத்தறுத்து வீழ்த்தினார். ஒருமுகமும் இரண்டு கரங்களு மொழிந்த மற்றவற்றையெல்லாம் அவ்வாறு வெட்டி வெட்டி வீழ்த்த மீண்டும் மீண்டும் அவை முன்போலவே முளைத்து முளைத்து வந்தன. கடவுள் அதுகண்டு கோபங்கொண்டு உங்காரஞ்செய்து உரப்பலும் அவைபின் உண்டாகாமல் உள்ளே யடங்கின. அவன் அதனாற் கோபமும் மானமுங்கொண்டு சிங்கநாதஞ்செய்து தண்டொன்றேந்தி எதிர்செல்லலும் முருகக்கடவுள் குலிசப்படையை யேவி அவனைச் சங்கரித்தருளினார் அதைக்கண்ட தேவர்கள் ஆனந்தங்கொண்டு பூமாரி பொழிந்து துதித்தனர்.

தன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் யுத்தகளத்தில் இறந்து விழுந்தானென்பதைச் சூரபன்மன் அறிந்து கவலைக் கடலுள்

Digitized By Roja Muthiah Research Library

மூழ்கி அடியற்ற மரப்போல நிலத்திலே விழுந்து புரண்டு புலன் கலங்கிப் பலவாறு புலம்பிப், பின்பு தெளிந்து சினங் கொண்டு பலவிடங்களினும் பரந்து கிடக்குந் தனது பெரு வலியுடைய சேனைகளைச் சதுரங்கபலத்தோடு வரும்படிசெய்து முருகக்கடவுளோடு சமர்புரியும்படி புறப்பட்டான்.

சூரபன்மனானவன் அழகிய ஓர் இரதத்திலேறிப், பலவகை வாத்தியங்கள் முழங்க அவுணசேனைகள் தன்னைச் சூழ்ந்துவர அறுமுகக் கடவுளிருக்குமிடத்தை யடைந்து, தனது சேனைகளைத் தூண்டிப் பூதசேனைகளோடும் வீரர்களோடுஞ் சமர்புரியும்படி யேவினான். அவுணசேனைகள் வேல் வாள் தண்டம் கதை முதலிய ஆயுதங்களினாலே முருகக்கடவுளுடைய சேனைகளைத்தாக்க அவர்களும் இவர்களோடு எதிர்த்து யுத்தஞ் செய்தனர். இருதிறத்தினும் பெரும்போர் உண்டாயிற்று. பூதசேனையும் வீரரும் அவுணரோடு சமர்செய்யவாற்றாது இரிந்தனர். அதுகண்டு வீரமெய்ம்பன் வில்லையேந்தி வளைத்து நாணேறிட்டு எதிர்த்துச் சரமாரிபொழிந்து அவுணர்களது தலை புயம் மார்பு கை கால் முதலானவைகளை அறுத்து மலைபோலக் குவித்து ஆர்ப்பரித்தான். அவனை அவுணசேனைகள் வந்து வளைத்துப் பல்வகை ஆயுதங்களையும் பொழிந்து எதிர்த்துப் போர் புரிந்தனர். அவன் நெடுநேரம் போர் புரிந்து அச்சேனா சமுத்திரத்தைக் குறைத்தல் இயலாமை கண்டு கந்தமூர்த்தியின் பக்கத்திலே வந்து நின்றனன்.

பூதப்படை யிழந்ததும் வீரமெய்ம்பனுந் தம்பியரும் வருந்தி மீண்டதும் அவுணப்படைசெய்யுஞ் செயலுங்கண்டு, கந்தமூர்த்தி புன்முறுவல்செய்து, நீண்ட ஒரு வில்லைக் கரத்திலேந்தி வளைத்து நாணொலிசெய்து அளவில்லாத அம்புகளைப்பூட்டி அவுணப்படைமேற் செலுத்தினர். அவைசென்று கொடிகளையுங் குடைகளையும் படைகளையும் யானைகளையுந் தேர்களையும் அவுணர் முடிகளையும் விழும்படி அட்டன.

Digitized By Roja Muthiah Research Library

எம்பிரான் விட்ட சராசரிபால் அவுணப்படை மரம்போற் சாய்ந்தன. குதிரைக்கூட்டங்கள் கடலிலுள்ள திரைகள் போல் எழுந்து விழுந்தன. இரதங்கள் மலைபோற் சாய்ந்தன. யானைகள் கரியமுகிற் கூட்டங்கள்போல விழுந்தன கவிகைகள் சூரிய சந்திரர் சாய்ந்து விழுந்தாற்போல விழுந்தன பிரமன் மால் இந்திரனாகிய தேவர்கள் அதுகண்டு ஆனந்தங்கொண்டனர். அச்சமயத்தில் முருகமூர்த்தியானவர் வாயுதேவனாகிய சாரதியை நோக்கி அவுணசேனை யிருக்குமிடமெல்லாம் இரதத்தை விடுக்குதியென்றார். அவ்வாறே சாரதியும் அவுணப்படை யிருக்குமிடமெல்லாம் இரதத்தைச் செலுத்தினன். முருகக்கடவுள் அவுணப்படை மாயும்படி வில்லிலிருந்து ஆயிரம் ஆயிரமான கணைகளைத் தூண்டி அவுணரது கைகளையும் மார்பையும் தலைகளையும் அறுத்துப் பிணமலையாய் விழும்படி செய்தார். இரத்தவெள்ளம் கடல்போலாயது. அப்பிணமலைகளை நாய்கள் கடித்துண்டன யானைகள் காலொருபுறமும் கையொருபுறமும் கழுத்தொருபுறமும் தலையொருபுறமும் வாலொருபுறமும் கொம்பொருபுறமும் முதுகொருபுறமுமாகத் துணிபட்டு விழுந்தன. குதிரைகள் தலையுங்காலும் வாலும் பல்லும் உடலும் வெவ்வேறு துண்டங்களாக்கப்பட்டுப் பலபக்கங்களினுஞ் சிதறி விழுந்தன. அங்குள்ள சேனைகள் அவ்வாறு அழிதலும் மற்றையண்டங்களிலுள்ள அவுணப்படைகளெல்லாம் வந்து மொய்த்தன. அவை யாவற்றையும் முருகக்கடவுள் கண்ட துண்டமாக்கினர் பின்பு மற்றை அண்டங்களிலுள்ள அவுணப் படைகளும் இவ்வாறே வருமென்றுன்னி அண்டகோளகையின் வாயிலைச் சரங்களினல் அடைத்தருளினர். பின்பு அண்டமுழுதும் நிறைந்து கிடக்கும் அவுணப்பிணமலைகளைத் திருநோக்கத்தினலே வெந்து நீறாகும்படி யாக்கினர். இவைகளைச் சூரபன்மன் உணர்ந்து சீற்றங்கொண்டு நமது சேனையை யலைத்த பகைவனைத் தேவர்களோடு கணப்பொழுதினுள்ளே முடிப்பேன் என்றான்.

Digitized By Roja Muthiah Research Library

முருகக்கடவுள் தமது தேரை விரைவாகச் செலுத்தி அவ்வசுரன் முன் எதிர்ப்பட்டார். சூரபன்மன் அறுமுகக்கட வுளைக் கண்களாற் கண்டு வெகுண்டு மகாமேருவை யொத்த சிலையொன்றை யெடுத்து வளைத்து நாணேறிட்டான். பூதரும் வீரருமாகிய சேனைகள் அவனை வளைத்துப் பலவகை ஆயுதங் களை வீசி ஆர்த்தனர். அவுணன் வில்லிலிருந்து பலகணைகளை ஏவி அச்சேனைகளை எருத்திஞன் அதனல், பூதசேனைகளில் அநேகர் இறந்தனர். அநேகர் கைகால் அறுந்துமெலிந்தனர். பலர் மயங்கி வீழ்ந்தனர். பலர் அஞ்சியோடினர். ஓடவும் அஞ்சிப் பலர் மாறுவேடம் பூண்டனர். இப்படிப் பூதர்கள் அழிபடுதலும் இலக்கத்தெட்டு வீரரோடு வீரவாகு தோ ன்றி யெதிர்த்து வில்லைவளைத்து அவுணன்மேற் கணைமாரி சொ ரிந்தார் அவை அவன்மேற்பட்டு ஒன்றுஞ் செய்யாது வீழ்ந் தன. சூரபன்மன் தன் சிலையிலிருந்து நூறுகோடி சரங்களை த்தூண்டி வீரர் விடுஞ் சரங்களைத் துணித்து அவர்கள் ஏறி வந்த இரதங்களையும், சிலைகளையும் அழித்தான். அதன்பின் அவர்களுடைய தோள்களினும் மார்பினும் சிரத்தினும் கரத் தினும் ஆயிரம் ஆயிரமான கணைகளைச் செலுத்தி இரத்தவெ ள்ளம் பெருகும்படி செய்தான். இலக்கத்தெட்டு வீரரும் எதிர்நிற்கலாற்ருது திரும்பினர். அப்பொழுது வீரவாகு சின ங்கொண்டு அப்பகைவனது தேர்மேற்பாய்ந்து வாளினல் அவ னுடைய வில்லைத்துணித்தார். அதனல் அவன்கோபங்கொண் டு வீரவாகுவின் மார்பிலே கையினுற் புடைத்தான். புடைத் தலும் வீரவாகு அயர்ந்து வீழ்ந்தனர். தூதனைக் கொல்லலா காதென்று எடுத்து ஆகாயத்தில் வீசினன். வீரவாகு அங்கி ருந்து மீண்டு கந்தமூர்த்தியின் பாங்கரில் வந்தடைந்தார்.

சூரபன்மன் மற்ருேர் வில்லையெடுத்தான். முருகக்கடவு ளும் நீண்ட ஒரு வில்லைக் கையிலேந்தினர். சூரபன்மன் இரு பதிலக்கம் பாணங்களையேவினன். முருகக்கடவுள் சிலகணை

களைத்தூண்டி அவற்றை யறுத்தருளினார். அசுரன் பின்னும் பலகணைகளை விட்டான். கடவுள் அவற்றையுஞ் சிதைத்தார். சிதைத்த பின்னும் அத்தீயோன் சரங்களை விடுத்தான். கந்தவேள் நூறுகணைகளால் அவற்றையழித்து அவன்மேல் எழுநூறு வாளிகளை ஏவினார். அசுரன் அவற்றை யறுத்து இரண்டாயிரஞ் சரங்களைத் தூண்டினான். கடவுள் இரண்டாயிரம் வாளிகளால் அவற்றையறுத்துப் பின்னும் இரண்டாயிரங்கணைகளை அவன்மேல் விட்டார். கந்தமூர்த்தி விடும் பாணங்களை அசுரன் சிதைக்க அசுரன் விடுஞ் சரங்களை முருகக்கடவுள் சிதைக்க இவ்வாறே எவரும் அஞ்சத்தக்க யுத்தமானது நெடுநேரம் நடந்தது. பின் அசுரன் முருகக்கடவுள் ஏறி வந்த கொடியை யறுத்துக் கணைகளால் அவருடைய திருமேனி தோன்றுவண்ணம் மறைத்து வெற்றிச்சங்கமூதினான். முருகக்கடவுள் அக்கணைகளைச் சிதைத்து அவனேறிய பெரியதேரின்மேலுள்ள கொடியையறுத்துக் கடலிலே தள்ளினார். அப்பொழுது பானுகம்பன் தனது ஆயிரம் வாயினும் ஆயிரஞ்சங்கங்களைவைத்து ஊதினான். அதுகண்டு நாராயணனது சங்கமும் முழங்கியது. தேவர்கள் யாவருங்கூடி அக்கினிதேவனை முருகக்கடவுளது தேரிலே கொடியாயிருக்கும்படியேவ அவனும் அத்தேர்மேலே கோழிக்கொடியாகி நின்று கூவி அண்டங்கள் வெடிபட ஆர்த்தான்.

பின்பு சூரபன்மன் ஆகாயத்திலே செல்ல முருகமூர்த்தியும் அங்கே சென்று தாக்கினார். சூரபன்மன் மண்ணிலே வந்தான். கடவுளும் மண்ணிலே வந்து எதிர்த்தார். சூரபன்மன் மறைந்து கடல்நடுவிலே ஒளித்தான். முருகவேள் அங்குஞ் சென்று சமர்புரிந்தார். சூரபன்மன் மாயையால் மறைந்து மாதிரமுடிவிலே யொளித்தான். கடவுள் அங்கும் போந்தனர்.

பின்பு மேருவினும் வைகுந்தத்தினும் அண்டகோளகையின்மேலுள்ளவாயிலினும் செல்ல முருகக்கடவுள் அங்குசென்

று சமர்புரிந்து சூரபன்மன் ஏறிய தேரை அம்பினாற் சிதைத்தார். உடனே இந்திர ஞாலத்தேரை உன்னினான். உன்னலும் அது வரச் சூரபன்மன் அதன்மேலேறிச் சமர்செய்தான். பின்பு கந்தமூர்த்தியால் அடைக்கப்பட்ட மற்றை அண்டவாயிலை உடைத்து அங்குள்ள சேனைகளைக் கூவியழைத்து அவை சூழ்ந்துவர வந்து எதிர்த்தான். முருகக்கடவுள் அவற்றை நோக்கி அழலெழ விழித்தலும் அவையெல்லாம் வெந்துநீறாயின. அண்டத்தப்பால் நின்ற சேனைகள் வந்து சூழ்ந்து கந்தமூர்த்தியையெதிர்க்க அவற்றை நோக்கி உங்காரஞ்செய்து உரப்பினார். அதனால் அவையாவும் அழிந்துதுகளாயின. பின்னும் அதன்மேலுள்ள அண்டத்திலிருந்து அவுணசேனைகள் வந்து சூழ்ந்து எதிர்த்தன. கரங்களிலுள்ள கணிச்சி சூலம் சக்கரம் தண்டு எழு என்னும் ஐந்து படைகளையும் முருகவேள்நோக்கி நம்மைச்சூழ்ந்து நிற்கும் இவ்வவுண சேனைகளையும் அப்பாலண்டங்களிலுள்ள சேனைகளையும் அழித்து இங்கே வருவீராகவென்றனர் அவ்வாறே அப்படைகள் பலபலவடிவங்கொண்டு அங்கேசூழ்ந்து நின்றசேனைகளையும் மற்றை ஆயிரத்தெழு அண்டங்களில் நிறைந்திருக்கும் அவுணசேனைகளையும் அழித்து மீண்டன. சூரபன்மன் சக்கரப்படையொன்றைவிட்டான். அதனைக் கடவுள் செங்கையாற்பற்றினார். மாயையினாலே பலபலவடிவங்கள்கொண்டான். சேதனப்பகழிபூட்டிக் கடவுள் அம்மாயா வடிவங்களை யழித்தார். அவுணன் மேலுள்ள ஒவ்வோரண்டங்களினுஞ் சென்றான். கடவுள் அவ்வண்டங்கள் தோறும் அவனைத்தொடர்ந்து சென்று சமரிழைத்தார். பின் இவ்வண்டத்திலுள்ள மகேந்திரம் வந்து சேர்ந்தான். அறுமுகக்கடவுள் அவனைவிடாது வந்துசேர்ந்தனர். அப்பொழுது இங்கிருந்த அவுணசேனை சூரபன்மனைச் சூழ்ந்து ஆரவாரித்தன.

அதுகண்ட முருகக்கடவுள் இவர் முபற்சி நன்றென்று நோக்கிப் புன்முறுவல் செய்ய, முன்னாளிலே திரிபுரங்கள் வெ

ந்தாற்போல அவ்வவுணப்படை வெந்து நீறாயின. அது கண்டு சூரன் கவலைகொண்டு "தம்பியர் மைந்தர் அமைச்சர் மற்றுள்ள சேனைகள் யாவரும் முடிந்தனர்: மிகுந்திருந்த சேனைகள் யாவும் இப்பொழுது முடிந்தன. யானே தனியனாயினேன் இனி யாதுசெய்வேன்" என்று பெருமூச்செறிந்து, மாயையின் சூழ்ச்சியால் இந்திரஞாலத்தேரை விடுத்து மந்தரகிரியைச்சொண்டுவரும்படி செய்ய, அதனால் அப்பலேயினுள்ள அமுதத்தின் காற்றுவீசி யுத்தகளத்தில் அதுவரையிலே முடிந்த அவுணப்படையெல்லாம் உயிர்பெற்றெழுந்தன. அது கண்டு முருகக்கடவுள் சங்கார காலத்திலே உயிர்த்தொகை யனைத்தையும் முடிவுசெய்கின்ற சிவப்படையை யெடுத்து இவ்வவுணசேனைமுழுவதையும் அழித்து வரக்கடவாயென்று செலுத்தினார். அப்படை யெழுந்துபோய் அவுணசேனையை யொருங்கேயழித்து இந்திரஞாலத்தேர்மேலிருந்த மந்தரகிரியையுந் துகளாக்கி முருகவேள் பாங்கரில் வந்திருந்தது சூரபன்மன் சினங்கொண்டு இந்திரஞாலத்தேரை யேவிப் பூதரையும் வீரரையுங் கவர்ந்துகொண்டுபோய் அண்டகோளகை யுச்சியில் வைத்திருக்கும்படி செய்தான். முருகக்கடவுள் ஒரு கணையையேவி அத்தேரைப்!பற்றிவரும்படி செய்து இலக்கத்தொன்பது வீரரையும் பூதசேனைகளையும் விடுவித்து, அவ்விந்திரஞாலத்தேரையும் அவுணன்பால் மீண்டுபோகாது தம்மருகிலே நிற்கும்படி செய்தார். பின்னும் அசுரன் பலவாறு யுத்தஞ்செய்தான். கந்தமூர்த்தி இரண்டாயிரஞ் சரங்களால் அவனேறிய சிங்கத்தை யடித்து வீழ்த்தினார். அசுரன் சக்கரவாகப்புள்ளாக வந்தெதிர்த்தான். அப்புள்ளை முருகவேள் வாளினால் வெட்டிச்சிதைத்தார். பின் பாராகி நின்றான் அதனையும் அழித்தார். கடல்வடிவானான். அதனையும் அழித்தார் ஊழித்தீயாயும், மாருதமாயும் வந்தான். அவற்றையும் அழித்தார். பதினெண்கணங்களின் வடிவுகொண்டான். அவற்றையும் அழித்தருளினார்.

Digitized By Roja Muthiah Research Library

பின்பு அச்சூரபன்மனை நோக்கி "மேகத்திற்றோன்றி அக்கணமே யழியும் மின்னலைப்போல நிலையில்லாத மாயாவடிவங்கள் பலவற்றையும நம்முன்னே கொண்டாய். அம்பினால் அவற்றையெல்லாம் அழித்தனம். பேதாய்! நாம் அழிவில்லாத நமது பெரிய வடிவத்தைக் கொள்வோம். அதனைக்காண்குதி" என்று, தமது விசுவரூபத்தை அவனுக்குக் காட்டியருளினார்.

கந்தமூர்த்தி சமனாத்திரியில் வலப்பாதத்தையும் அக்ஷபர்வதத்தில் இடப்பாதத்தையும் வைத்தவராயும், எண்ணில்லாத முகங்களும் எண்ணில்லாத விழிகளும் எண்ணில்லாத கரங்களும் எண்ணில்லாத செவிகளும் எண்ணில்லாத நாசிகளும் உள்ளவராயும், அநந்தகோடி சூரியப்பிரகாசம் பொருந்தியவராயும், அநந்தவிதமான ஆடைகளும் ஆபரணங்களும் மாலைகளும் சுகந்தங்களும் அணிந்தவராயும், சர்வாண்டங்களும் ஒவ்வோர் அவயவங்களில் ஒடுங்கிப் பரந்திருக்க வைத்தவராயுந் தோன்றக்கண்டான். முருகக்கடவுள் அவனுக்குச் சிறிது ஞானமுதிக்கும்படி அருள்செய்தார். சூரபன்மன் அவ்விசுவரூபத்தைத் தரிசித்தவுடனே ஆனந்தபரவசனாய் உரோமஞ் சிலிர்ப்ப அதிசயமடைந்து அவ்வடிவை மனத்தினால் வணங்கி நின்று "தேவாதிதேவரது இத்திருமேனியிலே சகல தேவர்களையும் சகல பூதங்களையும் பிரமன் மால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளையும் சகல முனிவர்களையும் உரகர்களையுங் கண்டேன். இவ்வடிவின் ஆதி நடு வந்தங்களைக் காண்கிலேன். முன்செய்த தவப்பயனால் எனக்கு இது தரிசனமாயிற்றன்றி வேறெவர்க்குங் காண்பதரிதாகும். ஆதாக முன்னம் வந்தோன் இவரை விருப்பு வெறுப்பின்றி நின்ற பராபர முதல்வரென்றே பகர்ந்தான். அவன் பகர்ந்தவற்றை மெய்யென்று துணிந்திலேன். இப்பொழுதுதான் இவரே ஈசனென்னுந் தன்மைகண்டேன். அம்ம! யான் பெற்ற அண்டங்கள்யாவும் இவரது பதரோமத்திலடங்கி நிற்கின்றன. சிங்கமுகனாகிய எனது தம்பி

Digitized By Roja Muthiah Research Library

யும் இரயணினும் அரிபிரமர்களால் அடிமுடி தேடி யறியப்படாத பரமன் இவரேயாமென்றதனையும் இன்றே யுண்மையென்றுகண்டேன். இவருடைய வடிவைத் தரிசித்தவுடனே மாறுபட்டெழுந்த கோபமுற்றுந் தணிந்தது. யுத்தஞ்செய்யவேண்டுமென்னுங் கருத்து ஒழிந்தது. மயிர்க்கால் தோறும் புளகமுண்டாயிற்று. கண்களில் ஆனந்தவருவி பொழிகின்றது. இடையறாத மெய்யன்பு சனித்தது. மனங்கசிந்துருகுகின்றது. என்பெல்லாம் உலையிடைப்பட்ட மெழுகுபோன்றன. அகந்தையொழிந்தது. ஞானம் உதித்தது. யான்செய்த தவப்பயனாலன்றோ இவ்வாறெய்தக்கிடைத்தது. என்னுடைய பாதங்கள் இவரை வலம் வரவேண்டும். கைகள் தொழவேண்டும். சென்னி தாழ்ந்து வணங்குதல் வேண்டும். வாய் வாழ்த்துதல்வேண்டும். தீமையில் நீங்கி யான் இவருக்கு அடிமைப்பட்டு வாழுதல்வேண்டும். ஆயினும் மானம் ஒன்று நின்று என்னெஞ்சைத்தடுத்தது" என்று இவ்வாறு கூறித் துதித்து நின்றான். முருகமூர்த்தி அவ்விசுவரூபத்தை மறைத்து மஞ்ஞைமீதூர்ந்த பழையவடிவங்கொண்டருளி அவனுக்களித்த ஞானவுணர்வை மாற்றிப்பழையவுணர்வைப்பெறப்படி செய்தார். அப்பொழுது சூரபன்மன் பழையகோபமும் பகையுங்கொண்டு முடிதுளக்கி நகைத்து "சிறுவனாகிய இக்கள்வன் சமர்செய்யமாட்டாது மாயாநீர்மையினால் என்னை மையல் செய்தான். இவனைப் போர் செய்து வெல்லக் கொல்வேன். இந்தப்போரை மூட்டிய வானவருயிரை இப்பொழுதே குடிப்பேன்" என்று மாயச் செயலால் இப்பூமியினும் வானத்தினும் நிறைந்த பேரிருளாகி வடிவங்கொண்டான். பின் அவ்விருளின் நடுவே பலதலைகளும் அளவில்லாத கைகளும் உள்ள ஒருசரீரமுடையவனாய்த் தேவரைவாரியுண்ணும்படி மேலே விண்ணிடைச்சென்றான். தேவர்கள் அதையுணர்ந்து அஞ்சி முருகக்கடவுளைச் சரணடைந்து பலவாறு துதித்து, எம்பெருமானே, எங்களைக் காத்தருளல் வேண்டுமென்று இரந்தனர்.

Digitized By Roja Muthiah Research Library

தேவர்களது வேண்டுதலையும் அக்கொடியோனது வல்லமையையும் ஆறுமுகப்பெருமான் உணர்ந்து, திருக்கரமொன்றில் இருக்கும் அழகிய வேற்படையை நோக்கி, விரைவில் இவன் உடலைப்பிளந்து உயிரையுண்டு வருவாயாகவென்று அச்சூரபன்மன்மேற் செல்ல விட்டார். அவ்விருதலை ஞாங்கர் ஆயிரகோடி சூரியப்பிரகாசந் தாங்கியெழுந்து செல்ல, அவன்கொண்ட பேரிருள் வடிவம் முழுவதும் அழிந்துபோயிற்று.

பின்பு வேற்படை அவ்வாறு வருதலைச் சூரபன்மன் கண்டு மாயையினால் ஒன்று கருதி விரைந்து கடலின் நடுவேபோய்ப் பாதலமளவும் புதைந்த அடியும் ஆகாயமளவும் நீண்ட முடியும் பூமிமுழுவதும் நிறைந்த கிளைகளும் உள்ள மாமரமாகி, எவரும் அஞ்சத்தக்கவாறு நின்றான். அது இலக்கம்யோசனை விசாலமான பருமனுடையது. வச்சிரம் போன்ற வயிரமுள்ளது. மிகவும் பரியது. அந்த மாமரவடிவங்கொண்ட சூரபன்மனது செயலை முருகக்கடவுள் தூண்டிய வேற்படை கண்டு சீற்றங்கொண்டு விரைந்து சென்று அம்மாமரவடிவைத் தடிந்தது. சூரபன்மன் மீண்டும் பழைய தன்வடிவைத்தாங்கிச் சினங்கொண்டு உடைவாளையுருவி முருகக்கடவுளோடுமலைபும்படி வந்தான். அவ்வேற்படை அச்சூரபன்மனது மார்பைப்பிளந்து உடலை இருகூறாக்கிக் கடலிலே தள்ளி ஆகாயகங்கையிலே போய் மூழ்கிப் புனிதமாகி மீண்டு பரமகருணாநிதியாகிய ஆறுமுகக்கடவுளது திருக்கரத்திலே வந்திருந்தது. இருகூறாகிய சூரபன்மனது உடற்பகுதி யிரண்டும் சேவலும் மயிலுமாகிச் சினங்கொண்டு முருகக்கடவுளை நோக்கி யுத்தம்புரியும்படிவர, அக்கடவுள் திருவருணோக்கஞ்செய்து அவனது மலமாயை கன்மங்களைப் போக்கிபாட்கொண்டு, சேவலைக்கொடியாகித் தேரின்மேலிருக்கும்படி விடுத்து, மஞ்ஞையை ஊர்திபாகக்கொண்டுநடாத்தினர். சேவலும் மயிலுமாய் நின்ற தேவர் பழைய வடிவைத்தாங்கினர். பிரமன் மால் இந்திரன்முதலி

Digitized By Roja Muthiah Research Library

யதேவரும் இலக்கத்தொன்பதுவீரரும் பூதசேனையும் ஆறுமுகமூர்த்தியை வந்து சூழ்ந்து வணங்கித்துதித்து ஆரவாரித்தனர். கடவுள் தேவர் முதலாயினோருக்கு வேண்டியவரங்களைக்கொடுத்துச், சயந்தன்முதலியதேவரைச் சிறையினின்று விடுவித்து, மகேந்திராபுரியை வருணனுக்கு விருந்து செய்து, தேவரும், வீரரும், பூதரும், புடைசூழக் கதிர்காம தலத்தை நோக்கி எழுந்தருளினார்.

சூரபன்மன் வதைப்படலமுற்றிற்று.

# கதிர்காமகிரிப்படலம்.

வேற்படையைத் திருக்கரத்திலே தரித்த கந்தமூர்த்தி மனவேகமென்னும் பொற்றேரிலேறிப், பிரமனும் மாலும் இந்திரனும் அவரவர் ஊர்திகளில்வர, வீரவாகுவும் இலக்கத்தெட்டு வீரரும், இரதங்களில் ஏறிச்சூழ, இரண்டாயிர வெள்ளம் பூதசேனை நாற்றிசையினும் மொய்த்து நடக்கப், பலவாத்தியங்கள் முழங்க யுத்தகளத்தை விட்டுப் புறப்பட்டுப், பலவகை வளங்களுள்ளதும் அழகிய சோலைகள் சூழ்ந்ததும் புண்ணியவடிவமாயுள்ளதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமான கதிர்காமகிரியையடைந்தார்.

அங்கே விசுவகன்மாவை நோக்கி, நாம் இங்கே வசித்தற்பொருட்டுச் சிறந்த நகரத்தையும் அழகிய கோயிலையும் விரைவிலே நிருமிப்பாயாக வென்று கட்டளையிட்டார். தெய்வத்தச்சனான விசுவகன்மா அவ்வாணையைச் சிரமேற்கொண்டு அதிவிசித்திராலங்காரமுள்ள மாடங்கள் மாளிகைகள் கூடங்கள் கோபுரங்கள் மண்டபங்கள் வாய்ந்ததும், மாடமாளிகைகள்தோறும் அழகிய கொடிகள்அசைந்தாடவும் இரத்தினதோ

Digitized By Roja Muthiah Research Library

ரணங்கள் தொங்கவும் நவரத்தினங்கள் இழைத்த படிகள் இலங்கவும் பலசாளரங்கள் நிலவவும் பெற்றுச் சிறப்புறுவதுமான பல வீதிகள் உள்ளதும், குளிர்ந்தசோலைகளும் தடாகங்களும் அங்கே அமையப்பெற்றதுமான ஒரு நகரத்தைச் சிற்பநூல் முறைப்படி இயற்றி, அந்நகரத்தின் நடுவே சகலசித்தியையும் அருள வல்லதும் கோடி சூரியப்பிரகாசமுள்ளதும் நவரத்தினங்களாலே குயிற்றப்பட்டதும் மங்களம் வாய்ந்ததுமான சிந்தாமணி யென்னும் ஆலயத்தையமைத்து, இந்திரநீலத்தால் ஒரு சிங்காசனமும் ஆக்கினன்.

ஆறுமுகப்பெருமான் இரதத்தினின்றும் இறங்கி, மால் அயன் இந்திரன் சயந்தன்முதலிய தேவர்களோடும், வீரவாகு முதலிய வீரர்களோடும் பூதவீரரோடும் கதிர்காமகிரியின்மேலுள்ள அந்நகரத்தினுள்ளே புகுந்து, வீதிகடோறும் உலாப்போந்து அவ்வீதிகளின் அழகைநோக்கி மகிழ்ந்து, சிந்தாமணியாலயத்தின் கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்று மண்டபங்களையும் வீதிகளையுங் கண்ணுற்று அக்கோவிலின் நடுவே யமைந்துள்ள இந்திரநீல சிங்காசனத்தின்மேல் ஏறி வீற்றிருந்து, ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருவிழிகளும், பன்னிரண்டு திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் இலங்கப், புன்னகை புரிந்து பெருங்கருணையோடு ஆனந்தமான திருக்கோலங்காட்டித், தேவர்க்கும் முனிவர்க்கும் வீரர்க்கும் பூதர்க்கும் அற்புதமான தரிசனங் கொடுத்தருளினார். யாவரும் அப்பெருமானுடைய அருமைத் திருக்கோலத்தைக் கண்களாற் கண்டு வணங்கி ஆனந்தமும் அதிசயமும் உற்றுத் துதிசெய்தனர்.

அப்பொழுது இந்திராதி தேவரும் முனிவரும் சுவாமியைவணங்கி, எம்பெருமானே, மகாமகிமைபெற்ற அண்ணலே, உமைமைந்தரே, தேவரீரை இங்கே பூசித்து வழிபடல்வே

Digitized By Roja Muthiah Research Library

ண்டுமென்னுங் காதல் கொண்டோம் அதன்பொருட்டு இக்கதிர்காமமலையின்மேலே சிறந்த ஒரு தீர்த்தம் உண்டாக்கித் தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பரம கருணாநிதியுங் கங்கைமைந்தருமான அக்கதிர்காமநாதர் வீரவாகுதேவரை யழைத்து எல்லாவுலகமும் உய்யும்பொருட்டு இம்மலையின்மேலே புனிதமாகிய தீர்த்தமொன்றை உண்டாக்குதி யென்று கருணையோடு ஆஞ்ஞாபித்தார். வீரவாகு அவ்வாணையைச் சிரமேற்கொண்டு மலையிலே தன்கரத்திலிருந்த கதையினால் மோதினார். அவ்வாறு மோதியவிடத்து ஒன்பது குண்டுகள் உண்டாயின. முன்னே சிவபெருமான் தனக்கு அருள்புரிந்த ஆஞ்ஞையை நினைந்து கங்கையானவள் அவ்வொன்பது குண்டுகளினின்றும் புறப்பட்டு எழுந்து புனிதம்பொருந்திய புண்ணியதீர்த்தமாயினாள்.

இந்திரன் முதலிய தேவரும் முனிவரும் அதைக்கண்டு ஆனந்தமும் அதிசயமுங் கொண்டு அத்தீர்த்தத்தைக் கரங்களினாலே தொட்டுச் சிரசிலே தெளித்துப் புனிதமுற்றனர். பின்பு கதிர்காமசுவாமியை அக்கங்காதீர்த்தத்தினாலும் பஞ்சகவ்வியங்களினாலும் பழவகைகளினாலும் சுகந்த திரவியங்களினாலும் மஞ்சனமாட்டிப் பொன்னுடைபுனைந்து நவமணிப்பூண்சாத்தி மாலைகள் அணிந்து அலங்கரித்து நைவேதனம் தூபந் தீபம் முதலிய பலவகை யுபசாரங்களாலும் ஆராதித்துப் பூசித்தனர். பின்பு நிலமுற வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று சிரசின்மேல் அஞ்சலிசெய்து ஆனந்த வருவி பொழிந்துமெய்யன்போடு "தேவாதிதேவரே, சகலலோகநாயகரே, தேவர்யாவராலுந்தொழப்பட்டவரே, சகலமந்திரங்களையும் வடிவமாகக் கொண்டவரே, சாந்தரே, உமக்கு நமஸ்காரம்.

செந்தாமரை மலர்போன்ற திருமுகங்கள் ஆறும் சிவந்த திருமேனியும் நவரத்தின கிரீடமும் உள்ளவரே, அபயம்வர

Digitized By Roja Muthiah Research Library

ள் வேல் அப்பு என்பவைகளை இடத்திருக்கரத்திலும் வரதம் குலிசம் வில் கேடகம் என்பவைகளை வலத்திருக்கரத்திலும் தரித்தவரே, நிருமல சொரூபரே, கிரவுஞ்சகிரியைப் பிளந்தவரே, தேவரீரைச் சரணடைந்தோம்.

வரதம் அங்குசம் கொடி கட்கம் வில் அபயம் ஞானம் பாசம் சக்கரம் வேல் வாள் அப்பு தோமரம் என்பவைகளைத் தரித்திருப்பவரும், கோடி சூரியப்பிரகாசரும், பன்னிருகரத்தரும், தாரகனையழித்தவரும், சிவகுமாரரும் ஆகிய தேவரீரைச் சரணடைந்தோம்.

ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உள்ளவரும், வரம் அபயம் வச்சிரம் வேல் வில் பாசம் அம்பு சூலம் வாள் கதை என்பவைகளைத் தரித்தவரும், சிங்கமுகாசுரனைச் சங்கரித்தவரும், ஈசரூபராகிய தேவரீரைச் சரணடைந்தோம்.

ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கரங்களும் உள்ளவரும், சிவந்தநிறத்தினரும், கிரீடம் புனைந்தவரும், அபயம் வரதம் கேடகம் வச்சிரம் சூலம் தாமரை சக்கரம் அப்பு வில் வாள் வேல் மணி என்னுமிவற்றைக் கரங்களிலே தரித்தவரும், தேவசேனாதிபதியும், மயில்வாகனரும், சூரபன்மனைச் சங்கரித்தவரும் ஆகிய தேவரீரைத் துதிக்கின்றோம்.

பலவகை ரூபமுடையவரும் பலவகை ஆயுதங்கள் தரித்தவரும் பலவகை ஆபரணங்கள் அணிந்தவரும் பலவகை நிறமுடையவரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம்." என்று பலவாறு கந்தமூர்த்தியைத் தோத்திரஞ்செய்தனர். அவர்கள்செய்த பூசையையும் தோத்திரங்களையும் அக்கடவுள் ஏற்று மகிழ்ந்து நீங்கள் விரும்பிய வரத்தைத் தருவோம், கேட்கக்கடவீர்கள் என்றனர். தேவர்கள் வணங்கி நின்று "எம்பெருமானே, யாவ

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P.M. DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

ருந் தரிசித்து வணங்கும்படி இம்மலையிலே தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளியிருந்து எல்லா உயிர்கட்கும் சர்வசம்பத்துக்களையும் ஈந்தருளல்வேண்டும் என்று வேண்டினர். கதிர்காமகிரீசுரர் மகிழ்ச்சியடைந்து "நீங்கள் விரும்பியவண்ணமே வரமளித்தோம். இம்மலையிலே என்றும் விட்டு நீங்காது ஆனந்தமாய் எழுந்தருளியிருப்போம். எவர் இந்த நவகங்காதீர்த்தத்தில் ஆடி நம்மைப் பூசித்து வணங்குவரோ அவருக்கு இம்மையிலே வேண்டும் போகங்களெல்லாவற்றையும் அளித்து மறுமையிலே நித்தியானந்த வாழ்வாகிய முத்தியையும் அருளுவோம்." என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்பு அகிலலோக தயாநிதியும் சிவகுமாரரும் சர்வைசுரிய சம்பன்னருமாகிய கதிர்காமநாதர் தேவர்கள் எப்பொழுதும் பூசிக்க அங்கே சிலகாலம் எழுந்தருளியிருந்தார். அசுரரை நிக்கிரகஞ்செய்து தேவருக்குப் பூரணாநுக்கிரகஞ் செய்தமைபால், அக்கதிர்காமகிரீசுரருடைய பெருங்கருணைத்திறம் எம்மால் விளம்பற்பாலதன்று. சுப்பிரமணியப்பெருமான் எழுந்தருளியிருக்குந் தலங்களினும் கொண்டருளிய மூர்த்தங்களினும் இது போல்வதொன்று உலகத்திலில்லை. விரும்பிய விரும்பிய பேறெல்லாம் இங்கே யெய்தலாம். இது சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியம் என்று நைமிசாரணியவாசிகளுக்குச் சூதமுனிவர் அருளிச்செய்தார்.

கதிர்காமகிரிப்படல முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# திருமணப்படலம்.

பின்பு சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கிச் சொல்லுகின்றார். பெருந்தவமுடையீர், கிருபா சமுத்திரமாகிய அக்கடவுள் சேனைகள் புடைசூழ அங்கிருந்து புறப்பட்டுத் திருச்செந்தூரை யடைந்து, அங்குள்ள ஆலயத்திலே யெழுந்தருளியிருக்க, இந்திரன்முதலிய தேவர்கள் யாவரும் அவரைமெய்யன்போடு பதினாறுவித உபசாரங்களுஞ் செய்து பூசித்தனர். கடவுள் அப்பூசையை யேற்று மகிழ்ந்து பின் யாவவரும் புடை சூழ எழுந்தருளித் திருப்பரங்குன்றை யடைந்து அங்கே மிக்க மகிழ்ச்சியோடு வீற்றிருந்தருளினார்.

தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் தன்னை நெடுங்காலம் வருத்திய பகைவராகிய சூரபன்மன் முதலிய தானவர் குழுவைச் சங்கரித்துத் தன்னை வாழ்வித்த அக்கடவுளுடைய கருணைத்திறத்தை நினைந்து அதற்குக் கைம்மாறாகத் தன்மகளாகிய தெய்வானையம்மையாரைத் திருமணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று கருதி அவர் திருமுன்னே சென்று வணங்கி, எம்பெருமானே, தேவரீர் விருப்பு வெறுப்பற்ற ஞானசொரூபியாயினும் உயிர்த்தொகை உய்யுமாறு, அடியேன் பெற்ற புதல்வியாகிய தெய்வயானையம்மையைத் திருமணஞ்செய்தருளல்வேண்டும். இது அடியேனுடைய விண்ணப்பம் என்று பிரார்த்தித்தான். எல்லாப்பொருள்களையுந் தமது உடைமையாகக்கொண்ட அப்பரம்பொருள் பெருங் கருணையுடையவராய்ப் புன்னகைசெய்து அவ்வாறேயாகுகவெனத் திருவாய்மலர்ந்தருளினார். இந்திரன் மகிழ்ச்சியடைந்து தன்மகளை அங்கே அழைத்து வருப்படிசெய்து, எங்கணும் மணவோலைபோக்கி, மால் அயன் முதலிய தேவரும் தேவமாதரும் முனிவரும் முசுகுந்தன் முதலிய அரசரும் வந்து மணச்சாலையிலே சூழ்ந்திருக்க, தான்பெற்ற மகளாகிய தெய்வயானை யம்மையாரைச் சுப்பிரமணியக்கடவுளுக்குத் தாரைநீர்வார்த்துத் தத்த

Digitized By Roja Muthiah Research Library

ணஞ்செய்தான். அக்கடவுள் சர்வான்மாக்களும் உய்யுமாறு அவ்வம்மையாரை யேற்று, மங்கலநாண் பூட்டி வேதவிதிப்படி அக்கினிவினைமுடித்து அம்மி மிதித்து அருந்ததிகாட்டி இவ்வாறு மணச் சடங்கினை முற்றித் திருமணஞ்செய்தருளினர். பின்புதெய்வயானையம்மையாரோடு வீற்றிருந்து தேவர் முனிவர் முதலிய யாவர்க்குந் திருவருள்புரிந்து, இந்திரன்முதலிய தேவரை விண்ணுலகிற் குடியேற்றி, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கைலைமலையை யடைந்து உமாதேவியாரையும் சிவபெருமானையும் வணங்கி விடைபெற்றுக் கந்தவெற்பையடைந்து அங்கே தெய்வயானையம்மையாரோடு வீற்றிருந்தருளினர். பின்பு தமக்கு மிக உவந்த தலமாகிய திருத்தணிமலையை யடைந்து அங்கே சிலபகல் தங்கியருளினர். அப்பொழுது நாரதமுனிவர் சுவாமி திருமுன்பு வந்து, எந்தாய், வள்ளிமலையின் ஒரு பக்கத்திலே மான்வயிற்றிற்பிறந்து வேடர்மகளாய்த் தினைப்புனங்காத்து ஒருகன்னிருயிருக்கின்றனர். அவரது சிறப்பை யான்சொல்லவல்லேனல்லன். தேவரீருக்கே அவர் உரியவராவர். அவரைத் தேவரீர் சென்று திருமணமுடித்தருளல் வேண்டுமென்று இயம்பினர். கந்தமூர்த்தி அம்முனிவரது சொல்லையும் வள்ளிநாயகியார் தம்மைநோக்கித் தவஞ்செய்தலையும் உணர்ந்து, வள்ளிமலையையடைந்து அங்கே சிலதிருவிளையாடல்கள் செய்து வள்ளிநாயகியாரை மகிழ்வித்துப் பின்பு வேடுவர்தொழ வள்ளிநாயகியாரைத் திருமணஞ்செய்துகொண்டு, திருத்தணிகையை யடைந்து சிலநாள் வைகி, கந்தவெற்பிற் சென்று இச்சாசத்தியும் கிரியாசத்தியுமாகிய வள்ளியம்மையார் தெய்வயானையம்மையாரோடு எழுந்தருளியிருந்து ஞானசத்தியாகிய வேற்படையையும் உடையவராய் எல்லா உயிர்களுக்கும் போகமோக்ஷங்களை ஈந்து கருணைபுரிந்தனர்.

திருமணப்படல முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# மீட்சிப்படலம்.

கந்தவெற்பில் எழுந்தருளியிருந்த முருகக்கடவுள், தெய்வயானையம்மையார் வள்ளிநாயகியார் என்னுந் தேவியர் இருவருக்குங் கதிர்காமத்தின் பெருமையை எடுத்தோதி, அத்தலந் தமக்கு மிக உவந்ததாதலையும் விளம்பினர். அம்மையாரிருவரும் 'சுவாமி, நாங்களும் அத்தலத்தைக்கண்டு அங்கு வசிக்க விரும்புகிறோம். ஆதலால், தேவரீர் எங்களோடு அங்கு எழுந்தருள இசைதல்வேண்டும்" என்றனர். சுப்பிரமணியக்கடவுள் அதுவே எமக்கும் விருப்பமென்று மகிழ்ந்து, அத்தேவியரோடும், தேவர்கள் வீரர்கள் பூதர்களோடும் புறப்பட்டு வழிக்கொண்டு, பலவிடங்களையுங் கடந்து வேதாரணியத்தை யடைந்து, ஒரு திருவிளையாட்டாக விசுவகன்மாவை நோக்கி "நாமனைவரும் ஏறி இக்கடலைக்கடந்து செல்லுதற்கேற்ற ஒரு மரக்கலத்தை இயற்றக்கடவாய்" என்றனர். விசுவகன்மா அக்கணமே மனத்தாற் சங்கற்பித்து, மிகப்பெரிதும் அழகுடையதுமான மரக்கலமொன்றை உண்டாக்கினன். சுப்பிரமணியமூர்த்தி மகிழ்வுற்று யாவரோடும் அந்த மரக்கலத்திலேறிச் சமுத்திரத்தைக்கடந்து சிவபூமியாகிய இலங்கையின் வடபாகத்திலுள்ள விஞ்ஞானபுரமென்னும் யாழ்ப்பாணத்தையடைந்து, நகுலமலைக்கு அருகிலே கீழ்பாலுள்ள ஒரு துறையில் இறங்கினர். காங்கேயமூர்த்தி இறங்கிய அத்துறை காங்கேயன்றுறையென்று பெயர்பெறுவதாயிற்று.

காங்கேயமூர்த்தி விசுவகன்மாவை நோக்கி, இங்கே நாம் தங்குதற்கிசைந்த ஓர் ஆலயத்தை இயற்றுதியென்ன, விசுவகன்மாவும் அவ்வாறே ஓர் ஆலயத்தை இயற்றினன். சுப்பிரமணியக்கடவுள் அக்கோவிலில் எழுந்தருளுதலும் தேவர்கள் அக்கடவுளை அங்கே பூசித்து வழிபட்டனர்.

Digitized By Roja Muthiah Research Library

பின்பு அங்கிருந்து மரக்கலமேறிக் கந்தவனத்தையடைந்து, அங்குவிசுவகன்மாவினால்ஆக்கப்பட்ட அழகியகோவிலில் எழுந்தருளியிருந்து தேவர்கள் பூசிக்க ஏற்று அருள்புரிந்து பின் அவ்விடத்தைவிட்டு மரக்கலமேறிச் சென்று தென்கயிலையாகிய திருக்கோணமலையிலுள்ள கந்தசாமிமலை, சமனொசலம், கண்டகீவடகாந்தாரம், உவந்தமலை முதலான புண்ணியமலைகளிலிறங்கி யிருந்து, அங்கங்கே உலகமுய்யும்படி சிலசிலகாலம் வைகித் தேவரால் வழிபடப்பெற்று, உவந்தமலைக்கு அணித்தான ஓரிடத்திலே மரக்கலத்தை நிறுத்தி அதனைச் சிலைவடிவினதாக்கினார். அக்கற்றோணி என்றும் அழிவில்லாமலிருக்கின்றது.

கந்தமூர்த்தியானவர் உவந்தமலையைவிட்டுநீங்கி, யாவரோடும் புண்ணியவடிவுடையதாய் மகிமைபொருந்தி விளங்கும் கதிர்காம கிரியையடைந்து, அங்குள்ள சிந்தாமணி என்னும் ஆலயத்திலே வள்ளியம்மையாரும் தெய்வயானையம்மையாரும் இருபக்கங்களிலும் அமைய, தேவரும் முனிவரும் வீரரும் பூதரும்போற்றிசைப்ப, ஆனந்தமுடையவராய்ச்சர்வான்மாக்களுக்கும் அருள்புரிந்துகொண்டு எழுந்தருளியிருந்தார் என்று சூதமுனிவர் கூறினார்.

மீட்சிப்படல முற்றிற்று.

## கதிர்காமசயிலமான்மியப்படலம்.

அப்பொழுது நைமிசாரணிய முனிவர்கள் சூதரைநோக்கி, தவமுதல்வரே, அற்புதமும் மேன்மையும் பொருந்திய காமசைலத்தின் மகிமையை இன்னும் விரிவாகக் கேட்குங் காத

Digitized By Roja Muthiah Research Library

னுடையேம். அவ்வாறே விரித்துக் கூறியருளல் வேண்டுமென்று வேண்டினர். சூதமுனிவர் இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி அஞ்சலிசெய்து மெய்யன்போடு அம்முனிவரைநோக்கிக் கூறுவாராயினர்.

முனிவர்காள், அக்கிரியின் மகிமை என்னாற் கூறுந்தரத்ததன்று. ஆயினும் ஒருவாறு சொல்லுகிறேன்:-

கைலாசம், மந்தரம், மேரு, குலகிரி, கந்தமாதனம், நிடதம், சந்திரகிரி, சிருங்கிமலை, இமயம், கதிர்காமகிரி என்னுமிவையெல்லாம் மகிமையினாலே தம்முள் ஒத்த உத்தம புண்ணியமலைகளாம். அம்மலைகளுள்ளே கதிர்காமமலை மகாஉத்தமமானது. இம்மையிலே விரும்பிய போகங்களையும் மறுமையிலே வீடுபேற்றையும் உதவுவதாகும். ஆகையால் அதன் மான்மியத்தைக் கவனமாய்க் கேட்கக்கடவீர்கள்.

விநாயகமலை, வீரவாகுமலை, தெய்வயானையம்மைமலை, வள்ளியம்மைமலை, ஆதித்தமலை முதலிய மலைகளோடுகூடி, சந்திரன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களின் சோதிபெற்று, உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிர்காமசைலம். சமுத்திரங்களும் மலைகளும் நதிகளும் நதங்களும் தலங்களும் மகாப்பிரளயகாலத்திலே லயமடைந்து போகின்றன. மகாசங்காரக்கடவுளாகிய சிவனொருவர்மாத்திரம் எப்படி லயமடைவதில்லையோ, அப்படியே கதிர்காமசைலமும் லயமடைவதில்லை. அம்மலைச்சிகரத்திலே மதங்கொண்ட யானைகள் பல சஞ்சரிக்கும். பச்சைநிறமுள்ள மஞ்ஞைகள் பல தோகையைவிரித்தாடும். நாணற்புற்கள் வனமாயடர்ந்திருக்கின்றன. இரத்தினமயமான கமலங்கள் மலர்ந்து அழகுசெய்யும். இப்படிப் பல சிறப்புக்கள்வாய்ந்தது அம்மலையின் சிகரம். பாதலமுதல் ஆகாசமளவும் நீண்டு அழிவின்றிச் சராசரமனைத்துஞ்

Digitized By Roja Muthiah Research Library

சூழப்பெற்று மருங்கிலுள்ள அரிபிரமாதி தேவர்களாற் பூசித்துவணங்கப்படுந் தன்மையுடையதாய் விளங்கலால், அம்மலை நீலகண்டராகிய சிவனைப்போன்றது. உன்னதத்தாலும் பருமையினாலும் எல்லாமலைகளினும் மேன்மைபெற்றது. பலவகை இரத்தினங்களும் விளங்கின்ற அம்மலை மின்னல்பொருந்திய பல கரியமேகங்களினாலே மறைக்கப்பட்டிருத்தலால், இலக்குமிநாதனாகிய விண்டுவையொத்ததாகும். திசைகளாகிய நான்கு முகங்களும், வேதவொலியும, தாவரமுதலியசிருட்டிப்பொருள்களும், பலதீர்த்தங்களும், சகலமந்திரங்களும், மின்னல் வாய்ந்த மேகங்களாகிய உபவீதமும், மான்றோலும் தன்னகத்தே விளங்கப்பெறுதலால் வேதாவாகிய நான்முகனையொத்து விளங்குவது. அடிமுடிகாணாமல் அரியும் அயனுந்தேடும்பொழுது சகலலோகங்களையுங்கடந்து அப்பாற்சென்று சோதிவடிவாய்ப் பிரகாசித்த சிவனைப்போல் இவ்வுலகிற் பெருஞ்சோதிமயமாய் விளங்குவது அச்சோதிட்காமமலை. சிகரத்திலே சந்திரனையுடைமையால் உமாதேவியையொத்து விளங்குவது. உமாதேவியும் இலக்குமியும் சரசுவதியும் வசிக்கப்பெறுதலால், அவர்கள் வாழுங் கைலை வைகுந்தம் சத்தியலோகமென்னும் உலகங்கள் போல்வதாகும். சித்தர்கள்வாழப்பெற்று ஔஷதங்கள் பொருந்தப் பெறுதலினாலே, தென்றிசையில் அகத்தியன்வாழும் பொதியவெற்புப்போல் அக்கினிதிக்கில் அச்சோதிட்காமம் பிரகாசிக்கும். சமுத்திரநடுவிலே யிருந்து விண்ணவர் துன்பத்தை யொழித்தமையாலும் அவருக்கு மிக்க பயனையளித்தமையினாலும் அம்மலை மந்தரவரையையொப்பதாகும். அசுரர் நுழைதற்கரியதாயும் தேவர்கள்வாழுதற்குரியதாயும் பொன்போன்றிலங்குவதாயு மிருத்தலால், மேருவரையை நிகர்ப்பதாகும்.

அம்மலைச் சிகரநடுவில் அநேககோடி சூரியப்பிரகாசம் பொருந்தி யிலங்குஞ் சிந்தாமணியாலயத்தில் நவரத்தினமய

Digitized By Roja Muthiah Research Library

ரான சிங்காசனத்தில் வள்ளிநாயகியார் தெய்வயானையம்மை யார் சமேதராய் அநேககோடி சூரியப்பிரகாசத்தோடு கதிர் காமகிரீசர் எழுந்தருளியிருக்கின்றார். அம்மலையிலே விநாய கரும் விநாயககணத்தரும், சாத்தாவும் அவரது கணங்களும், வீரபத்திரரும் அவரது கணத்தரும், வைரவரும் அவரது கண ங்களும், காலாக்கினியுருத்திரரும் அவரது கணங்களும், வீர வாகுவும் அவரது கணத்தரும், அயன், மால், உருத்திரன், சரசுவதி, இலக்குமி, உமை, இந்திரன், இந்திராணி, முப்ப த்துமுக்கோடிதேவர்கள், அட்டவசுக்கள், மருத்துவர், நக்ஷ த்திரங்கள், கிரகங்கள், கந்தருவர், அரம்பையர், சித்தர், சா ரணர், கின்னரர், அசுரர், இயக்கர், பைசாசர், இராக்கதர், சத்தகன்னியர், சயை, விசயை, வசிட்டர், முற்கலர், அக த்தியர், மார்க்கண்டேயர், பராசர், வியாசர், சுமந்து, பிருங் கி, மரீசி, கௌதமர், ததீசி, சைமினி, கர்க்கர், நாரதர், காசி பர், பிருகு, சுகர், கபிலர், ஆரிதர், புலகர், கௌசிகர், சனகர் முதலான யோகியர், நவசித்தர்கள் ஆகிய யாவரும் எப்பொ ழுதும் சுப்பிரமணியப் பெருமானுடைய ஆனந்ததாண்டவ தரிசனஞ்செய்து கொண்டு ஆனந்தக்கடலிலாழ்ந்து களித்து ருகும் உள்ளத்தவராய் மெய்யன்போடு வசிக்கின்றனர். அம்மலையையொத்த மேன்மையுள்ளதொன்று உலகத்தில் எங் குமில்லை. அதன்மகிமையை எடுத்தியம்ப ஆதிசேடனும் பிர மனும் இயலாதென்னில், மனிதருள் எவர் சொல்லவல்லவ ராவர். அம்மலை சுப்பிரமணியக்கடவுளுடைய வடிவமாய் மங் கலம்பொருந்தி விளங்குகின்றது. தவத்தினால் இணையின்றிவி ளங்கும் முனிவர்காள், இதுவரையிலே கதிர்காமமலையின் மகி மையை யெடுத்தோதினோம். இனி, உலகெங்கும் பெரும் புக ழ்பெற்ற கதிர்காமதலத்தின் மகிமையை இயம்புகின்றோம் என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

கதிர்காமசயிலமான்மியப்படலமுற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# கதிர்காமதலவிசேடப்படலம்.

---

கதிர்காமநகரம் முச்கோணவடிவான வீதிபெற்றுள்ளது. அந்நகரத்தின் நடுவிலே பளிங்குத்தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த திப்பியமானசோதி மண்டபம் ஒன்றிருக்கின்றது. அம்மண்டபத்தின் நடுவில் இந்திரநீலமணியினாற் செய்த பிரகாசமும் பேரழகும் பொருந்திய சிங்காசனத்தின்மேலே தெய்வயானையம்மையார் வள்ளியம்மையாரோடு ஞானசத்திவடிவாகிய வேற்படையைத் தாங்கிக் கிருபாமூர்த்தியாகிய கதிர்காமநாதர் விளங்குகின்றார். அச்சோதிமண்டபத்தின் எதிரே எல்லாவிலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மைபெற்ற சமாதியோகமண்டபம் ஒன்றிருக்கின்றது. விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரிய வேறமண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரருக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன. கந்தாலயத்துக்குத் தென்றிசையிலே அந்தணருக்குரிய இருக்கைகள் உள்ளன. மேற்றிசையிலே சைவருக்குரிய சித்திரமண்டபங்கள் உள்ளன. வடதிசையிலே திருக்கலியாணமண்டபம் ஒன்றுளது. கோவிற்பணி செய்யும் அந்தணர்களுக்கும், உருத்திரகணிகையருக்கும், ஏனைவருணத்தாருக்குமுரிய இருக்கைகளும் உள்ளன. அடியவரால் வீதிகடோறும் அமைக்கப்பட்ட பலமண்டபங்களும் உள்ளன.

அத்தலத்திலே புண்ணிய நதியாகிய மாணிக்ககங்கை பாய்ந்து கொண்டிருக்கும். அது கீழ்கடலை நாடியோடும். சந்தனம் அகில் யானை மருப்பு முதலிய பொருள்களை அலைக்கரங்களால்வாரிச்செல்லும். இரத்தின நிறமுள்ள பலவகைமீன்கள் அந்நதியிலே வாசஞ்செய்யும். தெளிந்தநீரையுடையதாய்

Digitized By Roja Muthiah Research Library

மனமகிழ்ச்சியைப விளைவிப்பதாயிருக்கும். அந்நதி சங்கம் சக்கரம் கதை பதுமம் வாள் என்பவற்றைத் தரித்தலாலும், எல்லாவுயிர்களையுங் காக்குமியல்பினாலும் வைணவியான கங்கைபொத்திலங்குவது. பகையின்றிவாழும் யானைமுதலிய மிருகங்களையும் இனியதொனியுள்ள குயில் முதலியபறவைகளையும், மேலான மரச்சோலைகளையும் தன்னகத்துடைய இருகரைஉள்ளது. மிகவேகமின்றி மெல்லெனச் செல்லுமியல்பினது. அயன் மால் அரன் என்னும் மூர்த்திகள் அவரவர் தேவியரோடும் பதினெண்கணங்களோடும் அந்நதிதீரத்திலே வாசஞ்செய்கின்றனர். பாண்டிநாடு, சேரநாடு, சோழநாடு, கொங்கணதேசம், மாளவதேசம், குளவதேசம், பப்பரதேசம், தெலுங்குதேசம், அங்கதேசம், வங்கதேசம், கலிங்கதேசம், என்னுந் தேசங்களிலுள்ள நான்மறைவேதியர் பலர், தத்தம் பன்னியரோடு வந்து கதிர்காமதலத்தில் வசித்து இப்புண்ணியநதியில் நியமமாகமூழ்கி நித்தியகருமமுடித்துக் கதிர்காமநாதனைத்தரிசித்து மெய்யன்போடு வழிபட்டுத் துதித்துப் பலவிரதங்களை அனுட்டித்துக்கொண்டு, இவ்வாறே பூருவபுண்ணியவிசேடத்தால் தலவாசமும் தீர்த்தஸ்நானமும் மூர்த்திதரிசனமுமாகிய மூவகைப்பதிபுண்ணியங்கள் உடையவராய், விரும்பிய பேறெல்லாம்பெற்று ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆதலால், இத்தலத்துக்கு நிகரானதலம் உலகத்தில் வேறில்லை என்று சூதமுனிவர் கூறினர்.

அப்பொழுது நைமிசாரணியமுனிவர் சூதனை நோக்கி, இத்தலத்தில்வந்து அவ்வாறுமூர்த்தி தல தீர்த்தவிசேடத்தால் அருள்பெற்றுய்ந்த தொண்டர்களது சரித்திரத்தை அறியவிரும்புகிறோம். அவற்றையுஞ் சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர் சூதமுனிவர் மகிழ்ச்சியடைந்து, முனிவர்காள், இத்தலத்தின் மகிமையை விளக்கும் பழமையான புராணகதையை உங்களுக்குச் சொல்வேன். அதைக்கேட்ப

Digitized By Roja Muthiah Research Library

தனால் எல்லாத் தீவினைகளும் ஒழிந்து பெரும் புண்ணியமுண்டாகும் என்று சொல்லலுற்றனர்.

கதிர்காம தலவிசேடப்படல முற்றிற்று.

# அபகீர்த்திமுத்திபெறுபடலம்.

சோழமண்டலத்திலே திருவொஞ்சிய நகரத்தில் அந்தணர்குலத்திலே பிறந்த அபகீர்த்திபேன்டன் ஒருவனிருந்தான். அவன் தன்குலத்துக்குரிய ஒழுக்கந்தவறித் தீயொழுக்கமுடையவனாய்ப், பிறர்மனை நயந்தும், பிறர்பொருள்கவர்ந்தும், பெரியோரை நிந்தித்தும், பொய்புகன்றும், கொலைபுரிந்தும், மதுபானஞ் செய்தும், காமமயக்கிலாழ்ந்தும், அகந்தைகொண்டுந்திரிந்து, சோழமகாராசனுடைய நட்பைப்பெற்று அந்நாட்டுக்குடிகளைத் துன்பப்படுத்தி வந்தான். அன்றி, அரசனுக்குக் குருவாயும் மந்திரியாயும் இருக்கும் பேற்றையும் பெற்றுக்கொண்டான். அவன் குடிகளுக்குச் செய்த பெருங்கொடுமைகள் எவராலும் பொறுத்தற்கரியவாயின. அதனால் அக்குடிகள் யாவருந் துயரங்கொண்டு அரசனுடைய அரண்மனைவாயிலையடைந்து தம்வரவைத்தெரிவித்து ஆஞ்ஞைபெற்று அவைக்களஞ்சென்று அரசனைவணங்கி "ஏந்தலே, அமைச்சனாய்வந்த தீயோனாகிய அபகீர்த்தியின் கொடுஞ்செயல்களால், நாங்கள் யாவரும் இந்நாடு நகரங்களைவிட்டு அயல்நாடுசெல்லக்கருதினோம். அவன்செய்யுந் துன்பங்கள் பொறுக்கலாற்றாதனவயாயின" என்று புலம்பி ஓலமிட்டனர்.

அதுகேட்ட அரசன் கோபத்தாற் கண்கள் சிவக்கத் தூதரைநோக்கி, கொடும்பாவியாகிய அவனை இப்பொழுதே நமநாடுநகரங்களில் இருக்கவொட்டாது வெளியே துரத்திவிடுங்கள் என்று ஆஞ்ஞாபித்தான். தூதுவர் விரைந்து சென்று

Digitized By Roja Muthiah Research Library

அவனைப்பிடித்துக்கொண்டுபோய் அந்நாட்டின் எல்லைக்கப்பால் விடுத்துத்துரத்தினர். அவ்வாறு துரத்தப்பட்ட அவன் அத்தேசத்தைவிட்டகன்று மரக்கலத்தில் ஏறிக் கடல்கடந்து சேதுமத்தியத்திருக்கும் மாதோட்டநகரையடைந்தான். பின் அங்குள்ள திருக்கேதீச்சரத்தில் வாசஞ்செய்துகொண்டு, மறையவர்வேடதனை மாற்றி வணிகவேடந்தாங்கி, அரிசி, பஞ்சு, எள், எண்ணெய் முதலிய பண்டங்களை விற்று வாணிபஞ் செய்துவந்தான். அதனால் அவனுக்குப் பொருள்வந்துசேர அம்மூடன், மதுபானஞ்செய்து வெறிகொண்டு, பெருந்திரவியங்களையும் ஆடையாபரணங்களையும் பொதுமகளிருக்கு அளித்து, மயங்கித் திரிந்தான். பின்பு கைப்பொருள் குன்றி வறுமை தலைப்படுதலும் விலைமாதர் அவனை வெறுத்துக் கைவிட்டனர். அவன் அக்கணிகையருடைய ஆடையாபரணங்களையும் பொருள்களையுங் களவுசெய்தும், அஞ்சாது பிரமகத்தி முதலிய மகாபாதகங்கள் புரிந்தும் திரிந்து, பின் அத்தலத்தை விட்டுக்கானகஞ்சென்று, பசியினாலுந் தாகத்தினாலும் வருந்தியுழன்று, முடிவிலே வேதங்களாலும் ஆகமங்களாலும் புராணங்களாலும் போற்றித்துதிக்கப்படுந் தக்ஷிணகைலாசமாகிய திருக்கோணமலையையடைந்தான் எவரேனும் எண்ணினும், காணினும், வசிக்கினும், மரிக்கினும் அவர்கள் பாவங்களையெல்லாம் ஒழித்து விடும் மகிமைபெற்றது அத்தலம்.

அங்கே முன்செய்த நல்வினைவசத்தால் ஆலயத்தையடைந்து, அபுத்திபூருவமாகக் கோணேசர்தரிசனங் கிடைக்கப்பெற்று, அக்கோவிலின் பக்கலிலுள்ள ஓரிடத்திலிருந்து பிச்சையேற்றுண்டு வயிறோம்பி நாட்கழித்தான். அக்கொடியபாதகன் ஒருநாள் அருகிலுள்ள புலைச்சேரியிற் சென்று பிச்சைவாங்கி மதுமாமிசங்களையுண்டு, இளமைப்பருவம் வாய்ந்த ஒரு நீசமங்கையைக்கண்டு காமுற்றுத் தன்னை மணஞ்செய்துகொள்ளும்படிகேட்டான். அவள் உடன்படாது மறுத்துவிட்டனள்.

Digitized By Roja Muthiah Research Library

பின்னும்பலமுறைவேண்டினான். சிறிதும் உடம்படாளாயினாள். பல தந்திரோபாயங்கள்செய்தான். அதன்பின் இரங்கி அவள் அவனை நோக்கி "வணிகனே, நான் புலையர் குலத்திற் பிறந்து வளர்ந்து மணஞ்செய்து வாழ்ந்து பின் என்காதல் நாயகனை யிழந்து கவலையோடு பிறரைவிரும்பாமலிருக்கின்றேன். நீயோ அடாதுசெய்யத்துணிந்தனை. ஆயினும் ஒன்றுகேள்: உயிர் நீங்குமளவும் நேசமாய் விட்டுப் பிரியேனென்று கோணேசர் சந்நிதியிலே சத்தியஞ் செய்துதரல்வேண்டும். அப்படிச்செய் வாயாகில், உன்விருப்பப்படி இணங்குவேன்" என்றாள். அப கீர்த்தி அவளைப் பார்த்து "பெண்ணே, உன் தந்தைதாயர் யாவர்? அவர் எங்குளார்?" என்று வினவினான். அவள் "வேங்கிட கிரிக்கு அயலிலுள்ள ஓர் ஊரில் இபங்கன் என்னும் புலைய னொருவனிருந்தான். அவனே என் தந்தை. என்தாய் சிங்கார கீர்த்தியென்பாள். அவள் தன்கணவனிடத்து மிக அன்புள்ள வள். அவள் வயிற்றில் நான் பிறந்தேன். என்பெயர் விடகு மாரி" என்றாள். அவன் அவைகளைக் கேட்டுக் களிகூர்ந்து கோ ணேசர் சந்நிதியில் அவளோடு போய் அவளுடைய கையைத் தொட்டுப் "பெண்ணே, நான் உயிர்போமளவும் உன்னைவிட் டகலேன், உன்மேலாணை, இது சத்தியம், என்சொல்லை உறு தியென நம்பு" என்று ஆணையிட்டான்.

பின் இருவரும் மனமகிழ்ந்து புலைச்சேரியிலுள்ள தம்ம னையையடைந்து கூடி இணைபிரியாது சுகமாக வாழ்ந்தனர். சிலகாலஞ்சென்றபின் அவர்களுக்கு ஒரு புதல்வனும் இருபு த்திரிகளும் பிறந்தனர். அவர்கள் இளமைப் பருவமடைந்த பின் புலையர்மரபில் அவர்களுக்கு மணஞ்செய்வித்தான். பின் அக்கொடியோன் மனைவியைக்கொன்று புதல்வியரையும் மரு கியையும் பெண்டாளத்தொடங்க, அதைக்கண்ட மைந்தன் அவனை அடித்துத்துரத்தினான். அம்மூடன் அங்கிருந்துபுறப் பட்டுப் பலதிசைகளிலுஞ் சுற்றித்திரியும்போது, கதிர்காமத்

Digitized By Roja Muthiah Research Library

துக்குப் போகும் பிராமணர் முதலானவரோடுகூடி அவர்க்கு ச் சுமைதூக்கிக்கொண்டு முன்செய்த தவப்பயனால் மகாதல மாகிய கதிர்காமத்தையடைந்தான். அங்கே சிறிதுநல்லுணர் வுதோன்றி அத்தலத்தின் மேன்மையையுணர்ந்து மகிழ்ச்சி கொண்டு புண்ணியவடிவான மாணிக்கசங்கையிலே தீர்த்த மாடிக் கதிர்காமநாதருடைய திருக்கோயிலையடைந்து சுவாமி தரிசனஞ்செய்து துதித்துக்கொண்டு, அத்தலத்தின் தென் றிசையிலே சயனித்திருந்தான் அவனுக்கு அங்கே சுரநோ ய் உண்டாயிற்று. ஏழுநாளளவும் அச்சுரநோயினால் வருந்தி எட்டாம் நாளில் அவ்விடத்திலேயே உயிர் நீங்கப்பெற்றான்.

பின்பு இயமதூதர் பாசம் வாள் முதலிய படைகளை க் கையிலேந்திப் பற்களை நெறநெறவென்று கடித்துக்கொ ண்டு கோபத்தோடு எதிர்ந்து, அவனைப்பிடித்துப் பாசங்க ளினாலே கட்டினார்கள். அப்பொழுது வீரவாகுவினால் அனுப் பப்பட்ட குகதூதர், பலபடைக்கலங்களை ஏந்தி விரைவாக வந்து, இயமதூதரையுறக்கி அவர்கட்டிய பாசத்தை அறுத் து, இத்தலமகிமையினால் இவனுடைய பாவங்கள் ஒழிந்தன. இவனைக் கந்தலோகத்துக்குக் கொண்டுசெல்வோமென்றுரை த்து, அழகிய ஒரு விமானத்தில் ஏற்றிக்கொண்டு சென்றனர். இயமதூதர் குகதூதரோடு எதிர்த்து அவரைத்தடுத்து "பிற ந்த நாண்முதல் அளவில்லாத மகாபாதகங்களைப் புரிந்தவனு ம் தீயசெயலுடையவனும் நரகத்தை யடையவேண்டியவனு மான இவனை எங்கள் பாசத்தினின்று விடுவித்து நீங்கள்கொ ண்டுபோவதென்ன? இவனை விட்டுவிடல் வேண்டும், கொண்டு செல்லவிடோம், உங்களுக்கு நாம் அஞ்சோம், எங்கள் செய லிலே குற்றமும் வரமாட்டாது" என்றார்கள். அவருரைத்த மொழிகளைக்கேட்டுக் குகதூதர் "தம்மிற்றாழ்ந்தவருக்கும் அ றிவீனருக்குந் தருமத்தைப்போதிப்பவன் எவனோ அவன்பா ம்புக்குப் பால்வார்த்தவன் அடையுங்கதியை யடைவான்.

Digitized By Roja Muthiah Research Library

உங்களுக்கு நியாயஞ்சொல்வது அதுபோலவேயாகும்" என்று சொல்லிச் சினங்கொண்டு கண்கள் சிவந்து, தம் தூதுவரில் ஒருவனை விடுத்துச் சித்திரகுத்தனை அழைத்து வரும்படி செய்து, அவனைநோக்கி, அபகீர்த்தியாகிய இவ்வேதியன் செய்த புண்ணியபாவங்களை எங்கள் முன்னே விரிவாக எடுத்துக்கூறுதியென்றுரைத்தனர். சித்திரகுத்தர் குகதூதரைப்பார்த்து "இவன்பிறந்த நாள்முதல் எண்ணிலாத கொடும்பாவங்களையே செய்திருக்கிறான். இவன்செய்த புண்ணியப்பகுதியில் ஒன்றேனும் எங்கள் கணக்கில் எழுதப்படவில்லை" என்றனர். குகதூதர் அதுகேட்டு நகைத்து "நீங்கள் இவன் செய்த புண்ணியத்தை எழுதாமல் பாவத்தைமட்டும் எழுதிக்கொண்டீர்கள். மிகநன்று நும்செயல் மிக்க அதிசயமேயாகும்! மார்க்கண்டேயர், சுவேதகேது முதலானவர்களுடைய நிகழ்ச்சியை அறியாமை வசத்தால் மறந்துவிட்டீர்கள்போலும். மடவோர்காள், அக்காலத்து இயமனுக்கு நேர்ந்த துன்பத்தையும் மறந்தீரோ. இவ்வந்தணனுடைய புண்ணியத்தைப் புகலுகின்றேம். கேளுங்கள்: சுப்பிரமணியமூர்த்திக்கு எப்பொழுதும் உவந்த வாசஸ்தானமாயும் பிரளயகாலத்தும் அழியாததாயும் உள்ள கதிர்காமதலத்தின் எல்லையில் வாசஞ்செய்த புண்ணியவசத்தாலும், மாணிக்ககங்கையில் ஆடிய மகிமையினாலும், கதிர்காமநாதரைத் தரிசித்து வணங்கித்துதித்ததனாலும், இத்தலத்தில் மரிக்கப்பெற்றதனாலும், இவ்வந்தணன் தன்பாவங்கள் நீங்கப்பெற்றுக் கந்தலோகத்தையடையும் பேறுடையவனானன். "புண்ணியமுடையோனாயினும் பாவியாயினும் இத்தலத்தில் உயிர்நீங்கப்பெற்றால் அவன் கந்தலோகத்தையே யடைவான். இதிற் சிறிதும் ஐயமில்லை" என்னும் மறைமொழியை நீவிர் அறிந்திலீர்போலும். இவன்செய்த பாவங்களெல்லாம் பெருநெருப்பிலகப்பட்ட பஞ்சுப்பொதிபோல, இவன் செய்த இப்புண்ணியங்களால் அழிந்துபோயின" என்றனர். அவ்வுரை கேட்ட இயமதூதர் அவனைப்பற்றுங் கருத்தை விட்டு மீண்டு

Digitized By Roja Muthiah Research Library

தும் இருப்பிடஞ் சென்றனர். குகதூதர் அம்மறையவனை விமானத்தோடு கொண்டு சென்று கந்தலோகத்திற்சேர்த்தனர். அவன் கதிர்காமதலமகிமையால் அக்கொடும் பாவத்தினீங்கிச் சுத்தாத்மாவாகி, அக்கந்தலோகத்திலுள்ள கணங்களில் ஒருவனும் நெடுங்காலங் கந்தமூர்த்தியின் சாமீபபதவியைப் பெற்று வாழ்ந்து, முடிவிலே கந்தசுவாமியின் கருணையால் நித்தியானந்த வாழ்வாகிய பரமுத்தியையும் அடைந்தான்.

அபகீர்த்தி முத்திபெறுபடலம் முற்றிற்று.

# வேட்டுவக்கள்வ ரருள்பெறுபடலம்.

நைமிசாரணிய முனிவர் சூதரைவணங்கி, கதிர்காமதலபுராணத்தைக் கேட்கக் கேட்க எங்களுக்கு அன்பும் அவாவும் அதிகரித்தெழுகின்றது. இன்னும் அதன்மகிமையை ஓதியருளல்வேண்டுமென்று கேட்டனர். சூதமுனிவர் மனமகிழ்ந்து பின்னுஞ்சொல்லுகிறார்.

முன்பு துவாபரயுகத்திலே சிங்களதேசத்திலே சூரியவமிசத்தானாகிய சிங்கபூபாலன் என்பவன் அத்தேசத்தையாண்டு அரசுசெய்துகொண்டிருந்தான். அவன் தன் தேசத்தில் வாழுங் குடிகள் யாவரையும் அன்போடு ஆண்டு தன் புதல்வரைப்போல வைத்துப் பாதுகாத்துவந்தான். அக்காலத்தில் வேடர்குலத்திற் பிறந்தவரும் எவர்க்குந் துன்பஞ்செய்பவருமான பல கள்வர், ஊரூர்தோறும் ஒவ்வொருநாளும் போய்த் திரவியங்களையும் தானியங்களையும் ஆடையாபரணங்களையும் கொள்ளைகொண்டும், வழிச்செல்லும் அந்தணர் முதலாயினோரை ஆயுதங்களினாலே வெட்டிக் கொள்ளை யடித்துத் துன்பப்படுத்தியும், மகாகொடியவராய்த் திரிந்தனர். மநுநெறிதவறாது அரசாளும் அவ்வேந்தன் பொல்லாக்கள்வர் செய்யுந் தீமையை

Digitized By Roja Muthiah Research Library

க் கேள்வியுற்று அடங்காச் சீற்றங்கொண்டு, அவர்களைத்தேடிப்பிடித்து வரும்படி ஆஞ்ஞைசெய்தான். அக்கள்வர் அதையறிந்து அச்சமுற்றோடி மிக இருளடர்ந்த ஒரு பெருங்காட்டினுள் நுழைந்து மலைக்குகையொன்றில் ஒளித்திருந்தனர். அப்படியிருந்துகொண்டு காலிநகரத்திற் போய்ப் பலதிரவியங்களையுங் கொள்ளையிட்டனர். பின் கதிர்காம தலத்துக்குச்செல்லும்படி யாத்திரையாக அவ்வழி வந்த பெண்கள் பலரைக்கண்டு மோகங்கொண்டு அவர்களைப் பிடிக்கும்படி பின்றொடர்ந்தனர்.

அம்மாதர் கள்வர் செயலைக்கண்டு நடுங்கி பயந்துபோற்றி அச்சத்தோடு மலையின்பக்கமாக ஒளித்தோடினர். கள்வர் அம்மாதரைத் துரத்திக்கொண்டு பின்னே சென்றனர். மாதர் விரைந்தோடிக் கதிர்காமதலத்தையடைந்தனர். அடைந்து கந்தமூர்த்தியைத் துதித்து இக்கள்வர்கையில் அகப்படாமல் எங்களைக் காத்தருளல் வேண்டுமென்று ஓலமிட்டனர் கதிர்காமநாதர் அப்பெண்கள்மேல் இரங்கித் தமதருளால் அக்கள்வர்கையில் அகப்படாமலிருக்கும்படி காத்தருளினர். கதிர்காமதலத்தின்மகிமையால் அக்கள்வர் அத்தலத்தினுள்ளே செல்லமுடியாமல் அதன் எல்லைப்புறத்திற் சமீபத்திலுள்ள வேறொருமலையில் வசித்திருந்தனர் சிலகாலஞ்சென்றபின் அக்கள்வர் மரணமடைந்தனர். அப்பொழுது இயமதூதர் விகாரவடிவத்தோடு அக்கள்வருயிரைக் கவர்ந்துபோம்படி வந்தனர்.

கதிர்காமநாதர் கருணைமேற்கொண்டு வீரவாகுவைநோக்கி, நமது கதிர்காமத்தின் அடலிலுள்ள மலையிலே மரிக்கும்பேறுபெற்ற அக்கள்வருயிரை இயமதூதர் கொண்டுசெல்லாவண்ணந் தடுத்து,நமது கந்தலோகத்தை யடைவிக்கும்படி நமது தூதரைவிடுப்பாயாக வென்று கட்டளையிட்டனர். அக்கட்டளைப்படி வீரவாகு குகதூதரிற் சிலரையனுப்ப, அவர்கள் அவ்

Digitized By Roja Muthiah Research Library

யிடம்வந்து இயமதூதரையெதிர்த்து, முசலம் வாள் கதை சூலம் முதலியபடைகளினாலே தாக்கிப் பின்னிட்டோடும்படி செய்து, அவ்வேட்டுவர் கள்வருயிரைச் சூரியனைப்போலப் பிரகாசிக்கும் அழகிய விமானங்களில் ஏற்றிவைத்துக்கொண்டு கந்தலோகஞ் சென்றனர் பின் அக்குக தூதரால் அடித்துத் துரத்தப்பெற்ற இயமதூதர் உடம்பெல்லாம் புண்ணுப் இரத்தவெள்ளம் ஆறாய்ப்பெருக வருந்தி, இயமதருமனிடம்போய் "அண்ணலே, எங்கள் தொழிற்பெருமை மிக நன்றாயிருந்தது. குகதூதர் எங்களை மிகத்துன்பப்படுத்தி அடித்துத்துரத்திவிட்டனர்" என்று தங்கள் துயரத்தைக் கூறி முறையிட்டனர். அதைக்கேட்ட சூரியகுமாரனான இயமதருமன் நகைத்து, அவரை நன்றாய்ப்பார்த்து ஆலோசனைசெய்து, விரைந்து கந்தமூர்த்தியிடஞ்சென்று, மகிமைபெற்ற அக்கடவுளை வணங்கி "மேன்மைபொருந்தியவரும் வேதங்களால் அறியக்கூடாதவரும் சாந்தரும் சோதிசொரூபரும் ஆதிதேவரும் சர்வலோகநாயகரும் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்பவரும் ஆகிய உமக்கு நமஸ்காரம். சுந்தரப்பெருமானே, என்னைக் காத்தருளல்வேண்டும். கருணை செய்து எனது விஞ்ஞாபனத்தைக் கேட்கவேண்டும்.

வேடுவராகிய கொடியோர் சிலர், பிறந்தநாண்முதல் மரணமடையுமளவும், களவுசெய்தும் கொள்ளையிட்டும் பிரமகத்திசெய்தும் வேறுபல பாவங்கள் புரிந்தும் திரிந்தனர். அவர்களிடத்தே புண்ணியம் எள்ளளவுமில்லை. அப்பெரும்பாதகர் மரித்தபொழுது எனது தூதுவர் அங்கேபோய் யாவரையும் பாசத்தாற்கட்டி இழுத்துக்கொண்டுவருங்கால், குகதூதர் வந்து என் தூதரையடித்துப் பாசக்கட்டையறுத்து விடுவித்து அவரை இங்கே கொண்டுவந்தனர் இது முறையாமோ" என்று ஓலமிட்டனன். முருகக்கடவுள் புன்முறுவல் செய்து "தருமராசனே, நீ புகன்றவையெல்லாம் வாய்மையே. ஆயினும் ஒன்

Digitized By Roja Muthiah Research Library

று கூறுதும். அதைக்கேள்: உலகத்திலே செல்வமிகுதியினாலே சிலர் அகந்தைகொண்டு அறிவில்லாதவராவர். நீயும் அவ்வாறே மதங்கொண்டு இவ்வாறு கூறினை. முன்னே மார்க்கண்டேயர் முதலிய சிவனடியாரை அவர்செய்த புண்ணியத்தையறியாமல் வருத்திப் பின்தண்டனையடைந்தாய். அறிவில்லாதவனே, இப்பொழுதும் அவ்வாறே செய்யமுயன்றாய். ஆயினும் மிக இரங்கி உன் பிழையைப் பொறுத்தனம்" என்றார்.

தருமராசன் கந்தமூர்த்தியை வணங்கி "எம்பெருமானே, பாவிகளினாலே கதிர்காமதலம் எப்படித் தரிசிக்கப்படும்? அப்பாவிகள் எவ்வாறு முத்தியடைவர்? அதனை யருளிச்செய்யவேண்டும்" என்றனன். சுவாமி அவனை நோக்கி "தருமராசனே கேள், அக்கள்வர் பாதர்போகத்திற் சிக்குண்டு கதிர்காமதலம் வந்து அங்கே மரித்தமையால் அவர்களுடைய முன்னைப்பாவங்களும் ஒழிந்துபோயின. எனதருளுக்கும் அவர் இடமாயினர். அதனால் முத்தியும் பெற்றனர் அறிவாய். இது முதல் நாம் சொல்லுமாறு நடக்குதி. யாவராயினும் தம் வாழ்நாளினிடையே கதிர்காமத்துக்கு எப்பொழுதாயினும் வரினும், எம்மைத்தரிசிக்கினும், எம்மை நினைக்கினும், கனவிலேனும் எம்மைக்காணினும், கதிர்காமதலத்திலே மரிக்கினும், அவரைக்கிட்டியும்பாராது ஒழிகுதி. அத்தன்மையோர் பெரும்புண்ணியம் பெறுதலால், எமது கந்தலோகத்தில் வாழ்தற்குரியவராவர். ஆதலால், விரைவாக உனது யமபுரம் போகுதி" என்று ஆஞ்ஞாபித்தார். அப்பொழுது இயமதருமன் கோபத்தோடு அப்படியேசெய்கின்றேனென்று சொல்லி வணங்கிக்கொண்டு புறப்படுதலும், விநாயகர், நந்திதேவர், வீரவாகு, மாசாத்தன், வீரபத்திரர், மகாகாளன் முதலாயினோர் யமதருமன் கந்தசுவாமி முன்புரைத்த கோபமொழிகளைக்கேட்டுச் சீற்றங்கொண்டு, இவனைப்பிடி அடி கட்டு வெட்டு குத்து என்று சொல்லிச் சூழ்ந்து, பாசத்தாற் கட்டி முசலம் முதலிய படைகளால்

Digitized By Roja Muthiah Research Library

நன்றாக அடித்துத் துன்டஞ்செய்தனர். இயமதன்மன் ஒவ்வோரடிக்கும் வருந்தி "சுவாமி, என்பிழையைப் பொறுத்தருளுப், என்னைக்காத்தருளுப். கிருபாசமுத்திரமே! அறிவில்லாது தேவரீருடைய சந்நிதியில் இவ்வாறுரைத்தேன். என்பாற்கிருபைசெய்தருளல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தான். அக்கடவுள் இரங்கி அவனை விட்டுவிடும்படிகூற, அவர்களும் அவ்வாறே விட்டுத் துரத்தினர். பின் எவருங்காணாமல் ஒளித்தோடினன். ஓடும்பொழுது வழியிலே தன்தூதரைக் கண்டு "நாம் அம்முருகக்கடவுளுடைய மகிமையைச் சிந்தியாமல் இன்று செய்த செயலாற் பெரும்பழிபாவங்களையடைந்தோம். இனி அத்தலத்தில் எவர் வசித்தனரோ, எவர்மரித்தனரோ, அவருக்கு அருகிலும் நாம் அணுகலாகாது. இவ்வாணைகடந்து செல்லின், நமது அரசும் இழந்து உயிர் நீங்கவும் வரும்" என்று சொல்லிக்கொண்டு, அத்தூதுவரோடு தன் யமபுரத்தையடைந்தான்.

அந்நாண்முதல் அத்தலத்தில் வசித்த புண்ணியமாந்தருகே இயமதூதர் செல்வதேயில்லை. இஃதுண்மையாம் என்று சூதமுனிவர் உரைத்தனர். நைமிசாரணியமுனிவர் ஆனந்தமுற்று, இத்தலமகிமை கேட்கக்கேட்க அமையாமல் இன்னுங்கேட்குமவாமிகுதலால், மற்றுள்ளவைகளையுஞ் சொல்லியருளல்வேண்டுமென்றனர். சூதமுனிவரும் மகிழ்ந்துசொல்லுகின்றார்.

வேட்டுவக்கள்வர் அருள்பெறு படலமுற்றிற்று.

## பாவதீபன் அருள்பெறுபடலம்.

சிங்களதேசத்திலே குளக்கோட்டு மகாராசன் நீதிதவறாமல் அரசாண்டு வரும் நாளில், அவனுக்குப் பாவதீபன் என்றொருமைந்தன் பிறந்தான். அவ்விராசகுமாரன் இளமைப்பரு

Digitized By Roja Muthiah Research Library

வமடைந்தபின் கோபதீபன் என்னும் மந்திரிகுமாரனோடு கூடித்தூர்த்தனாய்த்திரிந்தான். அவன் தன் குலப்பெருமையை எண்ணான், நீதிமுறையோரான் அரசுரிமையை நாடான், தருமமீதென்றுன்னான்; அடாதசெயலை செய்துதிரிந்தான். அவன கற்புடை மகளிரைக்கிட்டி அவர் கற்பையழிக்க முயன்றான். அதனால் அந்நகரவாசிகள் துன்பமடைந்து நீதிதவறாமல் அரசாண்டுவருங் குளக்கோட்டு மன்னனது ஆளுகையில் இவ்வகை அநீதியும் வரநேர்ந்ததேயென்று கவலைகொண்டு, அரசன்பாற்சென்று யாவற்றையுங்கூறி முறையிட்டனர். அரசன் புத்திரவாசையால் ஒன்றையும் யோசியாமல் நீதிதவறிச்சினங்கொண்டு யாவரையும் பிடித்துச் சிறைப்படுத்தினான்.

அப்பொழுது அவனருகிலிருந்த மந்திரி, அரசனைவணங்கி "அண்ணலே, நீ குடிகளைக்காக்குங் கடமையுடையவனன்றோ. இப்பொழுது முறைதவறி இவ்வாறு செய்தல் நீதியாகுமோ. ஆலோசனையின்றி எதனையுஞ் செய்யலாகாதே. மன்னன் ஒருபாற்கோடின் உலகம் எவ்வாறு நடைபெறும். நீயே இவ்வாறு செய்தால் இக்குடிகள் இனி யார்பாற் சென்று முறையிடுவர். இதனை நன்றாக ஆலோசனை செய்யக்கடவாய்" என்றனன். அம்மந்திரியின் வார்த்தையைக்கேட்ட அரசன் "மந்திரி, எனக்கு அருமையாக ஒரேமைந்தனுள்ளான். அவன்மேல் இவர் யாவரும் பெருங்குற்றத்தைக் கற்பித்தனர். இவர்கற்பித்தகுற்றத்துக்கு ஏற்றதண்டனையை நான் இவர்க்குச்செய்தேன்" என்றான். மந்திரி பின்னும் அரசனுக்குப் பலவிதமான நற்புத்திகளையும் நீதியையும் எடுத்தோதி, இனியவார்த்தை சொல்லி இரந்துகேட்டு, அவர்களைச் சிறைச்சாலையினின்று விடுவித்தான். பின் அவர்கள் நாம் இனி இங்கே வாழுதல் தகுதியன்றெனவெண்ணி, அந்நகரைவிட்டுப் புறப்பட்டுக்கதிர்காம நகரத்தையடைந்தார்கள்.

அப்பொழுது மூர்க்கனான அப்பாவதீபன் நடந்தவரலாறுகளை பெல்லாங் கேள்வியுற்றுத் தன் சேனைகளோடு மந்தி

Digitized By Roja Muthiah Research Library

ரிகுமாரனையும் அழைத்துக்கொண்டு, அம்மகளிரை நச்சிக் கதிர்காம நகரஞ்செல்லவெண்ணிப் புறப்பட்டான். புறப்பட்டுப்போகும்பொழுது இடைவழியிலே புற்றடர்ந்த ஒரு பெருங்காட்டில் அவனுடைய சேனைகளிற் சிலரை அரவந்தீண்ட, அதனையும் பாராமல் எஞ்சிய சேனைகளோடு சென்று கதிர்காமநகரத்தையடைந்தான். அக்கொடியோன் வரவைக்கண்ட உத்தமமகளிர் நடுங்கி ஆலயத்தினுள்ளே புகுந்து அக்கடவுளைச் சரணடைந்தனர்.

பாவதீபன் கதிர்காமதலத்தில் மிதித்தவுடனே தன்பொல்லாக்குணங்களெல்லாம் நீங்கப்பெற்று நல்லசித்தமுள்ளவனாய், கதிர்காமநாதரைத் தரிசிக்கவேண்டுமென்னுங்காதல்கொண்டு மந்திரிகுமாரனோடு திருக்கோவிலையடைந்து, கந்தமூர்த்தியைக் கண்களாற்கண்டான். கண்டவுடனே நெஞ்சங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி பொழிய மெய்யன்போடு வழிபட்டுத் தோத்திரங்கள்பாடி, அத்தமகிமையைப் புகழ்ந்து, பின்சேனைகளோடு மீண்டு தன்நகரத்தையடைந்தான். அங்கே நற்குண நல்லொழுக்கங்களோடு சிலகாலம் வாழ்ந்து பின் முடிவுகாலம்வர உயிர்துறந்தான. அவனுயிரைக் கவாந்துசெல்லும்படி நமன்றூதர் வருதலும் குகதூதர்வந்து அவர்களைத்துரத்தி அவனைத் தம்விமானமேல் ஏற்றியழைத்துக்கொண்டுபோய்க் கந்தலோகத்திற் சேர்த்தனர். பொல்லாக்குணங்கள் பல படைத்தவராயினும் இத்தலத்தை யடைந்தால், அக்குணங்களெல்லாம் நீங்கப்பெற்று நல்லவராய்க்கந்தமூர்த்திக்கு ஆளாகி, எங்கேசென்று வாழினும், எங்கேசென்று மரிக்கினும் கந்தலோகத்தை யடைவரென்பதை இதனால் அறியக்கடவீர். முனிவர்களே, இக்கதிர்காமமகிமையை எடுத்துச்சொல்ல வல்லவர் யாவர் என்று சூதமுனிவர் கூறினார்.

பாவதீபன் அருள்பெறுபடல முற்றிற்று.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

# தேவர் கலி வலி வென்றபடலம்.

பெருந்தவமுடையீர், செவிகளுக்கு அமிர்தம்பொழிவதை யொத்த இனிய கதையொன்றைச் சொல்லுகிறேன். முன்னொருகாலத்திலே பிரமா முதலான தேவர்யாவரும் கைலைமலையையடைந்து சிவபெருமானை வணங்கி ஒரு விண்ணப்பஞ்செய்வாராயினர்.

தேவாதிதேவ, லோகநாயகா, படைத்தல் முதலிய முத்தொழில்களையும் புரியும் பதிப்பொருளே; கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் மூவுலகத்திலும் வாசஞ்செய்திருக்கிறோம். இப்பொழுது முன்னே மனைவியும் பின்னே சுமைசுமந்து கொண்டு பெற்றதாயும் வர இவ்வுலகத்திலே கலிராசன் வந்துவிட்டான் பிருதிவி வீரிய மற்று ஔஷதி பலமில்லாததாயிருக்கிறது. நீசர் பெருமைபெற்று விளங்குகின்றனர். அரசர் குடிகளது பொருளைப்பறித்தலிலேயே எப்பொழுதுங் கருத்தாயிருக்கின்றனர். பிராமணர் தமக்குரிய கர்மத்தையிழந்து விபரீதகர்மங்களைச் செய்பவராயிருக்கிறார்கள். மனையாள் தன் கணவன்மேல் மிகவைரங்கொண்ட சித்த முள்ளவளாயிருக்கிறாள். மைந்தர் பிதாவை நிந்திப்பவராயினர் இப்படிப் பலவிதமான மாறுபாடுகொண்டு விளங்கும் இக்கலியுகத்திலே தருமம் காடுபோய் ஒளித்துவிட்டது. ஆதலால், இனி நாங்கள் எங்கே செல்லக்கடவேம். இக்கலியிலே நாங்கள் கலிவலியிலகப்படாது தப்பிவாழத்தக்க நல்ல ஒரு புண்ணியதலத்தை வகுத்தருளல் வேண்டுமென்று இரந்தனர்.

அவரது வேண்டுகோளைக் கேட்ட சிவபெருமான், தேவர்களே, நம்பிரியகுமாரனாகிய சுப்பிரமண்ணிய மூர்த்திக்கு உரிய தலங்கள் பலவிருக்கின்றன. அவற்றுள் மிக உத்தமமானதும், அவன் எப்பொழுதும் விட்டு நீங்காமல் வசிக்கப்பெ

Digitized By Roja Muthiah Research Library

றிறதும், அவனுக்கு மிக உவப்புடையதுமான கதிர்காமம் என்னும் மலையொன்றிருக்கின்றது. அம்மலையின் பக்கத்திலே மிக்க இன்பத்தைத் விளைவிப்பதும் கதிர்காமம் என யாவராலும் புகழப்படுவதும் எமக்கும் மிகப்பிரியமானதுமான தலம் ஒன்றிருக்கின்றது. கலிமன்னனும் நோய்களும் இயமனும் அத்தலத்தையடைவதில்லை. அங்கு வசிப்போரைப் பாவங்கள் சென்றடையா. வசிக்கப்பெறுவோர் பெரும் புண்ணிய முடையோர். ஆதலால், நீங்கள் யாவரும் அங்கே சென்று முனிவரோடு சுகமாய் வாசஞ்செய்யக்கடவீர்கள் என்று அருளிச் செய்தார்.

பிரமன் முதலான தேவர் சிவபெருமானுடைய திருவாக்கைக்கேட்டு மகிழ்ந்து கதிர்காமத்தையடைந்து, அங்கே சுகமாகவசித்துக்கொண்டு கலிவலியிலகப்படாதிருக்கின்றனர்.

தேவர் கலிவலிவென்றபடல முற்றிற்று.

# வணிகர் தனம்பெறுபடலம்.

மதுராபுரியிலே வணிகர்குலதிலகன் ஒருவன் மனைவி மைந்தர் நட்பினர் என்பவரோடு கூடிச் சிறப்புற்றுவாழ்ந்து, அளவில்லாத தனம் தானிய முதலிய செல்வங்களையும் உடையவனாயிருந்தான். அவன் வாணிபத்தினாலே பெரும்பொருள் ஈட்டிப் பலவகை இரத்தினங்களையுந்தேடி நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து, முதுமைப்பருவம் வந்தகாலத்துச் சிவபத்திவிசேடத்தாற் சிவலோகத்தை யடைந்தான்.

அவ்வணிகனுக்கு இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளும் இருந்தனர். அவருள் ஒருவன் பெயர் அளகேசன். மற்றொருவன்பெயர் சந்திரன். புதல்வியர்மூவரும் முறையே நாகவல்லி, ஏமவல்லி, இரத்தினவல்லி என்னும் பெயருடை

யோர். தந்தையை யிழந்து வாழும் அவர்களுடைய செல்வத்
தைக்கண்ட கள்வர் சிலர், ஒருநாள் இரவிலே மனையுட்புகு
ந்து எல்லாப்பொருள்களையுங் கொள்ளையிட்டுச் சென்றனர்.
மறுநாள் உதயத்தில் அப்புதல்வரிருவரும் அரசன்பாற் செ
ன்று, தம்பொருள் கொள்ளைபோன செயல்களைப் பெருங்கவ
லையோடு சொல்லி முறையிட்டனர். அரசன் அக்கள்வரைத்
தேடியும் பயன்படாதொழிந்தது. அதனால் அவ்விருவரும்
பெருங்கவலையோடு அங்கயற்கண்ணி பங்கராகிய சோமசுந்தர
க்கடவுளுடைய சந்நிதியை யடைந்து, தம்மனத்துன்பத்தை
யோதி முறையிட்டனர். கிருபைக்கடலும் உலகம் உய்தற்பொ
ருட்டுப் பல திருவிளையாடல்களைச் செய்தவருமான சோமசுந்
தரக்கடவுள் அவர்மேல் இரங்கிப் புன்முறுவல் செய்து, அவ
ருக்குக் காட்சிகொடுத்து, வணிகபுத்திரரே, சிங்களமென்னும்
புண்ணிய தேசத்திலே கதிர்காம தலமொன்றிருக்கின்றது. உல
கத்திலுள்ள தலங்களெல்லாவற்றுள்ளும் அது உத்தமமானது.
சகலவேதங்களாலுந் துதிசெய்யப்பெற்றது. அங்கே எமது
குமாரனாகிய சுப்பிரமணியன் மிகுந்தகளிப்போடு எப்பொழுது
ம் விட்டு நீங்காமல் வாசஞ்செய்து கொண்டிருக்கிறான். நீங்க
ள் அங்கேசென்று அவனைத்தரிசித்து உங்கள் குறைகளை மு
றையிடுவீராகில், அக்கணமே அவன் உம் விருப்பப்படி அருள்
புரிவான் என்று அருளிச்செய்தார்.

வணிகமைந்தர் அப்பெருமானுடைய திருவாக்கைக்
கேட்டு மனத்துயர் நீங்கி, மதுரையைவிட்டுப் புறப்பட்டுப் பெ
ருமகிழ்ச்சியோடு மரக்கலமேறிக் கடலைக்கடந்து சிங்களதேச
த்தையடைந்து கதிர்காமதலத்திற்போய், ஆடிமாச மகோற்ச
வகாலத்தில் இரதாரூடராய்க் கதிர்காமநாதர் வீதியில் எழு
ந்தருளி வரக்கண்டு நிலமுறவிழுந்து வணங்கித் தோத்திரஞ்
செய்து, பிறவித்துன்பத்துக்கு மூலமான சகலபாவங்களையும்
விட்டு நீங்கி அக்கடவுளது அநுக்கிரகத்தினாலே சகலஐசுவரி

Digitized By Roja Muthiah Research Library

யங்களையும் பலவகை இரத்தினங்களையும் பெற்றுக்கொண்டதுமன்றி மெய்ஞ்ஞானத்தையும் பெற்றனர்.

அவ்வாறு இருமைச் செல்வமும் பெற்ற அவர் அங்குநின்றும்புறப்பட்டுக் கடல்கடந்து மதுராபுரியையடைந்து தம்மைச் சார்ந்தவரோடு சுகமாய் வாழ்ந்திருந்தனர். கதிர்காமநாதரது திருவருளால் இம்மைக்கு வேண்டிய செல்வமும், மறுமைக்கு வேண்டிய ஞானமும் அவர்களுக்கு ஒருங்கே கிடைத்தன என்று பின்னும் சூதமுனிவர் சொல்லுகிறார்.

வணிகர் தனம்பெறுபடல முற்றிற்று.

## மாதர் அருள்பெறுபடலம்.

யூகபுரத்திலேயுள்ள பெண்ணொருத்தி விபசாரமுதலிய தீயொழுக்க முடையவளாய் எங்குந்திரிந்து, முன்செய்த புண்ணியவசத்தினாலே கதிர்காமதலத்தை யடைந்தாள். அங்கேமாணிக்க கங்கையில் ஆடிக் கதிர்காமநாதர் சந்நிதியையடைந்து சுவாமிதரிசனஞ்செய்து, தான் அதுவரையிலே செய்தபாவங்களை நினைந்து கவலைகொண்டு, பலவாறு தோத்திரஞ் செய்து, எம்பெருமானே, தேவரீரை வணங்கப்பெற்ற புண்ணியத்தால் அடியேன் அறியாமைகொண்டு செய்த சகலபாவங்களும் நீங்கும்படி திருவருள்பாலிக்கவேண்டும். தேவரீருக்கே அடைக்கலம்! அடைக்கலம்!! என்று கண்ணீர் வார்ந்து தேம்பித் தேம்பியழுது வேண்டினாள். கதிர்காமநாதர் அவள்மேல் இரங்கிச் சகல பாவங்களையுந்தீர்த்து ஞானத்தையும் அருளினார். அவள் அந்த ஞானத்தைப் பெற்று நிட்டை கூடி முத்திசேர்ந்தாள்.

இன்னும், புத்தளத்திலுள்ள ஒருகன்னியும், நிகும்பலாபுரத்திலுள்ள சிலமாதரும் கதிர்காமத்தையடைந்து, காமேசரை வழிபட்டு அவரருளால் ஞானம்பெற்று முத்தியடைந்தனர்.

Digitized By Roja Muthiah Research Library

பாவம் புரிந்தோராயினும் புண்ணிய மீட்டினோராயினும் கதிர்காமதலத்துக்கு வந்தால், அக்கணமே போகமோக்ஷங்களைப் பெறுகின்றனர். எவர்கதிர்காமத்தை நினைந்து புறப்பட்டுக் கதிர்காமநாதரை மறவாதசிந்தையராய் விநாயகமலையையடைந்து, நியமத்தோடு கணேசதீர்த்தத்தில் ஆடி நித்தியகருமம் முடித்துக்கொண்டு விநாயகக்கடவுளைப் பதினறுவித உபசாரத்தாற் பூசித்து விடைபெற்று, அன்போடு கதிர்காமநாதரைச் சிந்தித்துக்கொண்டு கதிர்காமமலையையடைந்து நவகங்காதீர்த்தத்தில் முழுகிச் சுவாமிசந்நிதியையடைந்து அம்மலையின்மேலுள்ள சிந்தாமணியாலயத்தில் வீற்றிருக்கும் அக்கடவுளை வழிபட்டுத் துதிக்கின்றனரோ, அவர் இவ்வுலகில் நெடுங்காலஞ் சுகமாகவாழ்ந்து, முடிவில் நித்தியானந்த முத்தியையும் அடைவர். எவர் நவகங்காதீர்த்தத்திலே யாடிக் கதிர்காமகிரீசரை வணங்கி இயன்றபொருளை அந்தணருக்குத் தானஞ் செய்வரோ, அவர் எல்லாப்போகங்களையும் நுகர்ந்து பின் கந்தலோகத்தையும் அடைவார் எவர் மாணிக்ககங்கையில்மூழ்கிக் கதிர்காமதலத்தில் எப்பெருமானைத் தரிசித்துவழிபடுவரோ, அவர்போகமோக்ஷங்களைத் தப்பாதுபெறுவர். எவர் இப்புராணகதையை எப்பொழுதும் அன்போடு நியமமாக ஓதுவாரோ, அல்லது கேட்பரோ, அவர் விரும்பியபேறெல்லாம் பெற்றுச் சீவன்முத்தருமாவர் என்று இவ்வாறு சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கதிர்காமபுராணத்தைச் சொல்லியருளினர். அம்முனிவர்கள் கேட்டுக் கதிர்காமநாதர் அருள்பெற்று ஆனந்தமாய் வாழ்ந்தனர். சூதமுனிவரும் தமது இருப்பிடத்தை யடைந்து சுகமாகவாழ்ந்தனர்.

மாதர் அருள்பெறுபடலம் முற்றிற்று.

கதிர்காமபுராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

Digitized By Roja Muthiah Research Library